Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்),
யாழ்ப்பாணம்.




- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

[1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]

(சி/2494)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 11 (02.05.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:213





வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரமுகர்களையும், பொதுமக்களையும் படங்களில் காணலாம்.

## மிழ்த்தேசியத்தின் இருப்பினைத் தற்காத்துக்கொள்வதற்கு அனைத்து வழிமுறைகளிலும் அர்ப்பணித்துப் போராடுவோம்!

### ழ்த்தேசிய கூட்டு - மே தினத்தில் பிரகடனம்

ழ்த்தேசியத்தின் ஆற்றல் ...டல், உள ரீதியில் ...நம் வர்க்கத்தினராகிய ...ழீழ விடுதலைப்புலிக ...லமையான - எமது தலைவராகிய வேலுப் ...ிரபாகரனது வழிநடத் ...பருமையுடன் ஏற்றுக் ... தமிழ்த்தேசியத்தின் ...ம், தமிழ் மக்களது ...தயும், பாதுகாப்பை ...ாட்டு விழுமியங்களை ...துக்கொள்ள அனைத்து ...ளையும் கைக்கொண்டு எம்மை அர்ப்பணித்துப் போராடுவோம் என உறுதிசெய்கின்றோம.

என நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற தமிழ்த தேசிய கூட்டுத் தொழிற்சங்கத்தின் மே தின நிகழ்வில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மே நாள் பிரகடனத்தின் முழு விபரம் வருமாறு-

சிங்கள மேலாதிக்க வர்க்கமானது தனது இருப்பை வலுப்படுத்த சிங்கள உழைக்கும் வர்க்கத்தை தனக்கு முண்டு கொடுக்கும் தூணாக, எடுபிடி ஏவலனாக செயற்படவைத்தது விசனத்துக்குரியது. எனவே சிங்கள உழைகக்கும் வர்க்கத்தை பேரினவாத மாயையில் இருந்து விடுபட்டு உழைக்கும் வர்க்கமானது தன்னைப் பிணைக்கும் அனைத்துத் தடைகளையும் தகர்த்தெறியும் வலலமை கொண்டது என்பதைப் புரிந்துகொண்டு செயற்படமுன் வருமாறு சிங்கள தொழிலாளர் வர்க்கத்தை புரட்சிகர தோழமையோடு அழைக்கின்றோம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளிடம் இடைக்கால நிர்வாகம்; வலியுறுத்தி நேற்று மே தினக்கூட்டம்!

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபையை வழங்குமாறு வலியுறுத்தி தமிழீழப் பிரதேசமெங்கிலும் நேற்றைய சர்வேதேச மேதினக் கொண்டாட்டங்கள் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு உள்ளிட்ட அனைத்து தமிழீழ தாயகப் பிரதேசங்களிலும் இந்நிகழ்வு சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் 14 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைத்து மேதினக் கூட்டத்தினை நடத்தியதுடன் இடைக்கால நிர்வாக சபையைத் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் வழங்கவேண்டுமெனவும் கூட்ட முடிவில் வலியுறுத்தியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் ஊர்வலமாக வந்து சேர்ந்த மக்கள் மன்னார் நகரசபை மண்டபத்தில் ஒன்று திரண்டதுடன் அங்கு மாபெரும் மேதின நிகழ்வை நடத்தியுள்ளனர். தமிழீழத் தேசியத்தலைவரின் உருவப்படம் தாங்கிய ஊர்திப்பவனியும் இடம் பெற்றதாகவும் அங்கிருந்து கிடைக்கும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# காழும்புக்கு வந்த விதார் ஹெல்கிசன்

# சமாதான முயற்சிகளில் இறங்கினார்!

# சமாதான முயற்சிகளில் இறங்கினார்!

## ...ருடன் நேற்றுப் பேச்சு; இன்று ஜனாதிபதியுடன் சந்திப்பு;

(கொழும்பு)

**...ந்தலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் சமாதானப் பேச் ...கலை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்காக - நோர்வே ...ரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான குழு ...நேற்று அதிகாலை கொழும்பு வந்து சேர்ந்தது.**

**நேற்று அதிகாலை 3.25 மணியளவில் இலங்கை வந்த விதார் ஹெல் ...கிசனை நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் கட்டுநாயக்க விமான ...நிலை...த்தில் வைத்து வரவேற்றார்.**

காலை 11 மணியளவில் அலரி ...ளிகையில் பிரதமர் மஹிந்த ...ஜபக்ஷவை விதார் ஹெல்கிசன் ...ந்தித்துப் பேச்சு நடத்தினார். இந் ...ச் சந்திப்பு சுமார் ஒரு மணி ...நரம் நிகழ்ந்தது.

இந்தச் ... பின் போது, புலி ...ளுடன ... மாதானப் பேச்சு ... விரைவில் ஆரம்பிப் ... நட... க்கைகளை மேற ... ளும்படி நோர்வே பிரதி ... விவகார அமைச்சர் விதார் ...ஹெல்கிசனிடம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டார்.

அத்துடன், வெளிநாடுகளில் இருந்து புனரமைப்புக்காக நிதியுதவிகளை சர்வதேச சமூகத்திடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் நோர்வே குழுவிடம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை, விதார்ஹெல்கிசன் இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தப் பேச்சுக்களை முடித்துக்கொண்டு - ஹெல்கிசன் இந்தோனேசியா செல்லவிருப்பதாகத் தெரியவருகிறது.

இதனிடையே, நோர்வே விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தலைமையிலான நோர்வேத் தூதுக்குழு ஒன்று நாளை கிளிநொச்சிக்குச் சென்று புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுநடத்தவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(01)

## விசேட அதிரடிப் படையினருக்கிடையில் அம்பாறைக் காட்டில் நடந்த மோதல்!

அம்பாறை மாவட்டத்திலுள்ள மாதுறு ஓயா காட்டுப்பகுதியில், விசேட அதிரடிப்படையினரின் இரு குழுக்களுக்கிடையில் எதிர்பாராமல் நிகழ்ந்த துப்பாக்கிச் சண்டையில் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது-

மாதுறு ஓயா காட்டுப்பகுதியில் ரோந்துசென்ற விசேட அதிரடிப்படையினர் அப்பகுதியில் யானை ஒன்று மிரண்டு ஓடுவதை அவதானித்து- சந்தேகம் கொண்டு அந்தப் பகுதியை நோக்கித் துப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் போராளி மரணம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் புலிகளின் இயக்கப் போராளி உயிரிழந்தார்.

கிரானுக்கு வடக்கே 5 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பெண்டுகள்சேனை என்ற இடத்தில் நேற்றுக் காலை 11.30 மணியளவில் கிளைமோர் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

எனினும் ஜெயந்தன் படையணியைச் சேர்ந்த போராளி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்தாகவும், இது ஒரு தற்செயலான சம்பவம் என்று மட்டு-அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார்.





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

(சி/2489)

EXPOAIR

Your friend in the skies...

# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற மேதின நிகழ்வுகளில் சில காட்சிகள்...




ஈகைச் சுடரேற்றுகையில் மண்டபத்திற்கு வெளியே திரண்டிருந்தோர்




தேசியக் கொடி ஏற்றும் செழியன்




தேசியக் கீதம் இசைக்கையில்







வைபவத்தில் உரை நிகழ்த்துவோர்







பொதுச் சுடரேற்றுவோர்

# சின்னத்தையே வாடகைக்குவிட்ட ஜனதாக் கட்சி தலைவர் சுவாமி!

(சென்னை)

உருப்படியான அரசியல் கட்சிகளின் வரிசையில் புதிய நீதிக் கட்சியும் சேர்ந்துள்ளது. இந்தக் கட்சி 28 தொகுதிகளில் ஒரே சின்னத்தின்கீழ் போட்டியிடுகிறது.

தேசியக் கட்சியாக விளங்கிய ஜனதாக்கட்சி, சுப்பிரமணியம் சுவாமியின் தலைமையின் கீழ் தற்போது மாநிலக்கட்சியாகச் சுருங்கிவிட்டது. மாநிலக்கட்சியாகச் சுருங்கினாலும் கூட ஜனதாக் கட்சியின் சின்னமாக பாரம்பரியம்மிக்க ஏர் உழவன் சின்னம் விளங்கிவருகிறது.

ஒவ்வொரு தேர்தலிலும் பல தொகுதிகளில் போட்டியிட்டு வாக்கு விகிதாசாரத்தை நிலையாக வைத்துக்கொண்டு சின்னத்தைக் காப்பாற்றிக்கொள்வது சுவாமியின் பழக்கம்.

அந்த வகையில் தற்போதும் தமது சின்னத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக ஒரு கட்சிக்கே தனது சின்னத்தை வாடகைக்கு விட்டுள்ளார் சுவாமி. ஏ.சி.சண்முகத்தின் தலைமையில் செயற்படும் ஜாதிக்கட்சியான புதிய நீதிக் கட்சிக்கு ஏர் உழவன் சின்னத்தைக் கொடுத்துள்ளார் சுவாமி.

புதிய நீதிக்கட்சி இந்தத் தேர்தலில் 30 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இதில் 28 தொகுதிகளில் ஏர் உழவர் சின்னத்தின் கீழ் போட்டியிடுகிறது. திண்டிவனம், கடலூர் வேட்பாளருக்கு மட்டும் ஏர் உழவன் கிடைக்கவில்லை மாறாக ஆகாய விமானச் சின்னத்தில் போட்டியிடுகிறார்கள்.

முக்கிய கட்சிகளின் வேட்பாளர்கள்தான் ஒரே சின்னத்தில் போட்டியிடுவார்கள். சுவாமி பு[illegible]ணியத்தில் புதிய நீதிக்கட்சியும் அந்த வரிசையில் சேர்ந்துள்ளது.

## வாஜ்பாயை அவதூறாகப் பேசினாராம்

# ராம் ஜெத்மலானி மீது வழக்குத் தாக்கல்!

(லக்னோ)

பிரதமர் வாஜ்பாயைப் பற்றி அவதூறாகப் பிரசாரம் செய்ததாக ராம்ஜெத்மலானி மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோ தொகுதியில் பிரதமர் வாஜ்பாயை எதிர்த்து பிரபல சட்டத்தரணி ராம்ஜெத்மலானி சுயேச்சையாகப் போட்டியிடுகிறார். அவருக்குக காங்கிரஸ் ஆதரவு கொடுக்கிறது.

லக்னோ தொகுதியில் முகாமிட்டுள்ள ராம்ஜெத்மலானி தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். தினமும் வாஜ்பாய் மீது சரமாரியான குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசுகின்றார்.

இந்த நிலையில் லக்னோவைச் சேர்ந்த வி.கே.சர்மா என்ற சட்டத்தரணி, லக்னோ நீதிமன்றத்தில் ராம்ஜெத்மலானி மீது நேற்றுமுன்தினம் ஒரு வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

வாஜ்பாயைப் பற்றி ராம்ஜெத்மலானி மிக மோசமான வார்த்தைகளால் அவதூறுப் பிரசாரம் செய்து வருகின்றார் என்றும், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருகிறார் என்றும், தனது மனுவில் சர்மா கூறியிருக்கிறார்.

இந்த மாதம் 21 ஆம் திகதி இந்த மனு விசாரணைக்கு வருகிறது.

## புதிய ஸ்ரார் கல்வி நிலையத்தி[...]

# பதக்கம் அணிவித்த[...] பரிசளிப்பு வைபவமு[...]

(யாழ்ப்பாணம்)

நாவலர் வீதி, அரியாலையில் அமைந்துள்ள புதிய ஸ்ரார் கல்வி நிலையத்தில் கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. சா/த பரீட்சையில் சித்தியுடைந்த மாணவர்களைக் கௌரவித்துப் பதக்கம் அணிவித்தலும், கல்வி நிலையத்தின் முதலாம் தவணைப் பரிசளிப்பு வைபவமும் இன்று பிற்பகல் நான்கு மணிக்கு கல்வி நிலை[...] மண்டபத்தில் நடைபெ[...]

ஆசிரியர் எஸ்.[...] தலைமையில் நடை[...] நிகழ்வில் - பிரதம [...] யாழ். கல்வி வலய [...] விப் பணிப்பாளர் ரி.ப[...] சிறப்பு விருந்தினராக[...] பி.சண்முகதாசனும் கல[...] வுள்ளனர்.

# வீதி விபத்தில்[...] குடும்பஸ்தர் காய[...]

நேற்றுப் பிற்பகல் யாழ். நகரப் பகுதியில் இடம்பெற்ற ஹையேஸ் வான், மோட்டார் சைக்கிள் விபத்தின்போது குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

தீவகம், வேலணைப் பகுதியைச் சேர்ந்த செல்லையா பாஸ்கரன் (வயது 43) என்பவரே விபத்தின் போது முகத்திலும் கால்ப் பகுதியிலும் படுகாயமடைந்தவராவார்.

யாழ். ரெலிக்கொம் நிறுவனப் பகுதியில் இடம்பெற்ற இந்த வி[...]தில் - தீவகத்தில் இருந்து யா[...]பாணம் நோக்கி வந்துகொண்டிரு[...] ஹையேஸ் வானும், யாழ்ப்பாண[...]தில் இருந்து தீவகம் நோக்[...] சென்ற மோட்டார் சைக்கி[...] மோதிக் கொண்டதாலேயே இ[...] விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர் யாழ். போத[...] வைத்தியசாலையில் சிகிச்சைக[...]காக அனுமதிக்கப்பட்டுள்[...]

## தேர்தலில் போட்டியிடும்/பிரசாரம் செய்[...]

# நடிகர்களின் திரைப்படங்களை தூரதர்சனில் ஒளிபரப்பக்கூடாது

## தேர்தல் ஆணையகம் உத்தரவு

(புதுடெல்கி)

தேர்தலில் போட்டியிடும் அல்லது பிரசாரம் செய்யும் நடிகர்களின் படங்களைத் தூரதர்சனில் ஒளிபரப்பக்கூடாது என்று தேர்தல் ஆணையகம் உத்தரவிட்டுள்ளது.

அரசியலில் ஈடுபட்டுள்ள நடிகர்களின் திரைப்படங்களைத் தேர்தல் காலத்தில் தூரதர்ஷனில் ஒளிபரப்பத் தடைவிதிக்கப்படுவது வழக்கம்.

இந்த தேர்தலில் தேர்தல் ஆணையகம் என்ன சொல்கிறது என்பதை அறிய 'பிரசார் பாரதி' கடிதம் எழுதி இருந்தது.

இதற்குப் பதில் அளித்துத் தேர்தல் ஆணையகம் கூறியிருப்பதாவது-

அரசியல் கட்சியில் இணைந்துள்ள நடிகர், நடிகைகளின் தேர்தலில் போட்டியிடும் அல்லது பிரசாரம் செய்யும் நடிகர், நடிகைகளின் திரைப்படங்களைத் தூரதர்ஷனில் ஒளிபரப்பக்கூடாது.

அது மட்டுமல்லாமல் அதுபோன்ற நடிகர், நடிகைகள் இடம்பெற்ற சீரியல்கள், வர்த்தக விளம்பரங்கள் மற்றும் நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்ப அனுமதியில்லை.

தேர்தல் முடியும்வரை இந்த உத்தரவைத் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும். தனியார் தொலைக்காட்சிகளுக்கு இந்தக் கட்டுப்பாடு[...] இல்லை. இவ்வாறு தேர்தல் ஆ[...]யகம் தெரிவித்துள்ளது.

திரைப்பட நட்சத்திரங்கள்[...] வினோத்கன்னா, தர்மேந்திரா, மி[...] சட்டர்ஜி, கோவிந்தா ஆகியே[...] தேர்தலில் போட்டி[...]கிறார்[...] ஸ்மிர்தி இரானி [...] தொலைக்காட்சி நடிகைய[...] கிறார்.

நடிகர் சுரேஷ் ஓபராய், வி[...] ஓபராய், டெல்கி மேல்சபை உ[...]பினர் ஹேமமாலினி மற்றும் மு[...]கன்னா ஆகியோர் தேர்தல் பிரச[...]தில் ஈடுபட்டுள்ளனர்.

**The Royal College of Jaffna**

அரசில் அங்கீகாரம் பெற்று 10 வருடங்களாக, சிறந்த மாணவர்களை உருவாக்கி வரும், தனியார் பாடசாலை.

426, (302) K.K.S வதி, யாழ்ப்பாணம் பிளார்க் வீதி சங்கானை (சி-2490)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

எம்.ஜி.ஆர்.(இருவேடம்), லதா, மஞ்சுளா, நம்பியார் நடித்த

**உலகம் சுற்றும் வாலிபன்** (சி-2386)

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45(பு.நே.)

**Do not Disturp**

**நாகம்ஸ்** சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக டொல்பி ஒலியமைப்புடன் விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேலு நடித்த

**அருள்** (றீல்ஸ்)



ஆசனப் பதிவுகளுக்கு - நாகம்ஸ் பாட்டா-சுன்னாகம் நாகம்ஸ் சினிமா, யாழ்.பெயின்ற் காடின், முட்டாஸ் கடைச்சந்தி , K.K.S றோட், யாழ்ப்பாணம். (சி-2397)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இளைய தளபதி விஜய், திரிஷா நடித்த

**கில்லி**



காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி-2387)

# புலிகளிடம் உள்ள ஆயுதங்களில் அதிகமானவை ராணுவக் களஞ்சியத்திலிருந்து பெறப்பட்டவையே!

## தெற்காசிய நட்புறவு நிலையப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

"தமிழீழ விடுதலைப் புலிகளிடமுள்ள ஆயுதங்களில் 42 சதவீதமானவை இராணுவக் களஞ்சியங்களில் இருந்த ஆயுதங்களே.

இந்த ஆயுதங்கள் புலிகளிடம் எவ்வாறு சென்றது என்பது குறித்து எந்த இராணுவ விசாரணையும் இதுவரை நடத்தப்படவில்லை.

இவ்வாறு தெரிவித்தார் தெற்காசிய நட்புறவுச் சர்வதேச நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜேம்ஸ் அற்புதராஜா.

கொழும்பு - கோல்பேஸ் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'சிறிய ஆயுதங்களும் அதன் பாவனையும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

இராணுவ ஆயுதங்களஞ்சியத்திலிருந்து விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் செல்லவில்லை என முன்னர் கூறியிருக்க முடியும். ஆனால் அது முற்றிலும் தவறானது என்பது தற்போது புலனாகின்றது.

கருணா - புலிகள் மோதலை அடுத்து புலிகள் இயக்கத்தின் ஆயுதங்கள் தாராளமாகச் சந்தைக்கு வந்துள்ளன. கொழும்பு வீதிகளில் சிறிய, பெரிய ரக ஆயுதங்கள் தாராளமாகக் கிடைக்கின்றன.

மாற்று அரசியல்வாதிகளுக்கு எதிராக கிளர்ச்சியை ஏற்படுத்த பொதுமக்களை ஆயுதமயப்படுத்தப்படுவது சமூகத்தில் பெரும் கலவரங்களை ஏற்படுத்தும்.

பிரிட்டன் போன்ற மேற்குலக நாடுகள் பயங்கரவாதத்திற்கெதிராகக் குரல் எழுப்பும் அதேவேளை, தமது நாட்டின் ஆயுத உற்பத்தியை ஊக்கு விக்கின்றன. வர்த்தகத்திற்கும் தொழில்வாய்ப்பிற்காகவும் அரசாங்கங்கள் ஆயுத உற்பத்தியை ஊக்குவித்து வருகின்றன. மேற்குலக நாடுகளில் இருந்து சிங்கப்பூருக்கு சட்டரீதியாக வரும் ஆயுதங்கள், அங்கிருந்து சட்டவிரோதமாக ஏனைய நாடுகளுக்குச் செல்கின்றன.

ஆயுத வர்த்தகத்தில் ஈடுபடுவோர் அரசாங்கங்களுக்கும் அதேவேளை சம்பந்தப்பட்ட அரசாங்கத்துக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபடுவோருக்கும் ஒரேநேரத்தில் - ஒரேவகையான ஆயுதங்களை விற்பனை செய்கின்றனர். ஆயுத உற்பத்தியில் ஈடுபடும் நாடுகள், தமது வர்த்தகத்திற்காக ஏனைய நாடுகளில் பிணக்குகளை உருவாக்கி வருகின்றன.

இலங்கையில் சுமார் 15 ஆயிரம் சிறிய ஆயுதங்கள் சட்டவிரோதமாக பாவனையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், உண்மையில் எத்தனையாயிரம் சிறிய ஆயுதங்கள் பாவனையிலுள்ளது என்ற சரியான கணக்கு யாருக்கும் தெரியாது. ஆனால் பாவனையிலுள்ள ஆயுதங்களில் 50 வீதமானவை அரசியல்வாதிகளிடமும் அவர்களது ஆதரவாளர்களிடமுமே இருக்கின்றன என்றார்.

## புலிகளுடனான சந்திப்பின் பின்னரே பேச்சுக்கான திகதி குறிக்கப்படுமாம்!

இலங்கைக்கு வரும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான குழு, வன்னி சென்று புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர், அரசு - புலிகளுக்கிடையிலான சமாதானப் பேச்சுக்கான திகதியை நிர்ணயிக்கக் கூடியதாக இருக்குமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - மிக விரைவில் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்த அக்கறை கொண்டுள்ளார். விதார் ஹெல்கிசன் இன்று ஜனாதிபதியைச் சந்திக்கும்போது ஜனாதிபதி தனது நிலைப்பாட்டை விபரிப்பார் என அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே, நோர்வே குழு நாளை வன்னி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனைச் சந்தித்து பேச்சுவார்த்தைக்கான அடிப்படை குறித்து பேச்சு நடத்தும்.

வன்னியில் புலிகள் இயக்கத்துடன் நடத்தப்பட்ட விபரங்களும் அன்றைய தினமே ஜனாதிபதிக்கு விபரிக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

இலங்கை வரும் விதார் ஹெல்கிசன் நாளை இரவு நாடு திரும்புவார் என்றும், அவரது குழுவில் இடம்பெறும் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் 5 ஆம் திகதிவரை கொழும்பில் தங்கிநின்று அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்திப்பார் என்றும் நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

# லஞ்ச ஊழல்களை விசாரிப்பதற்கு ஜனாதிபதி தலைமையில் விசேட குழு!



(கொழும்பு)

லஞ்ச ஊழல்களை விசாரிப்பதற்காக தனது கட்டுப்பாட்டில் குழுவொன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் அமைச்சுக்களின் செயலாளர்களைச் சந்தித்த ஜனாதிபதி சந்திரிகா, இந்தக் கருத்தைத் தெரிவித்ததர்கக் கூறப்படுகிறது.

லஞ்ச ஊழல்கள் குறித்து விசாரணைகளை நடத்துவதற்காக தற்போது இயங்கிவரும் குழுக்களுக்கு மேலதிகமாக இந்தக் குழு அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

ஊழல் மோசடிகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான சட்டமூலம் ஒன்றை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்ததாக ஜனாதிபதி செயலகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

# ஆதிவாசிகளுக்கு தனியான அமைச்சை பெற்றுத்தரவும்!

## வேடுவத் தலைவர் அரசிடம் கோரிக்கை

ஆதிவாசிகளுக்குப் புறம்பான அமைச்சு ஒன்றைப் பெற்றுத்தருமாறு வேடுவத் தலைவர் ஊருவகே வன்னியலத் ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த அரசுக்கும் இப்படியான வேண்டுகோளை விடுத்ததாகவும், அந்த அரசாங்கம் கவனத்தில் எடுக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் வெவ்வேறு மக்களின் கலாச்சாரத்தை பாதுகாக்க பல அமைச்சுக்கள் உருவாக்கப்பட்டிருந்தும் வேடுவர்களுக்கான இவ்வாறான ஒரு அமைச்சு ஏற்படுத்தப்படாதிருப்பது வேடுவர்களின் கலாசாரத்துக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

வேட்டையாடுவதற்கு காடுகளும், விவசாயம் செய்வதற்கு நிலங்களும் அருகி வருவதால் வேடுவர்கள் பல பிரச்சினைகளுக்கு உள்ளாகிவருகிறார்கள். இந்த நிலையைப் போக்காவிட்டால் எதிர்காலத்தில் வேடுவர் சமுதாயம் என்ற ஒன்று இல்லாமல் போகும்நிலை ஏற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வடமேல் மாகாண முதலமைச்சராக அத்துல விஜேசிங்க

(கொழும்பு)

வடமேல் மாகாண சபை முதலமைச்சராக அத்துல விஜேசிங்க நேற்றுமுன்தினம் காலை பதவியேற்றார்.

ஆளுனர் தர்மதாஸ வன்னியாராச்சி முன்னிலையில் இந்தச் சத்தியப்பிரமாண வைபவம் இடம்பெற்றது.

புதிய ஆளுநராக இவர் நியமிக்கப்பட்ட பின்னர் கலந்துகொண்ட முதலாவது பொதுநிகழ்வு இதுவாகும்.

இந்த நிகழ்வில் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியும் கலந்துகொண்டார். அத்துல விஜேசிங்க கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் மாகாண சபையின் ஆயுட்காலம் முடியும் வரையில் வடமேல்மாகாண முதலமைச்சராக பதவி வகித்து வந்தார்.

இதேவேளை - இந்த மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட புதிய உறுப்பினர்கள் எதிர்வரும் வியாழக்கிழமை பதவியேற்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த அரசு தயாரித்துள்ள திட்டத்தை வெளிப்படுத்த வேண்டுமாம்!

### ஹெல உறுமய கோருகின்றது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு அடித்தளமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தயாரித்துள்ள தீர்வுத்திட்டத்தை பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இவ்வாறு ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான அத்துரலிய ரத்னதேரோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தாமலேயே தமது நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அதுபோலவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கமும் நடக்கத் தீர்மானித்துள்ளது.

பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தாமல் வைத்திருக்கும் இந்த விடயத்தை தாம் எதிர்ப்பதாகவும், எனவே இதனை நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்திய பின்னரேயே விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கான வழிவகைகள் தொடர்பாக நோர்வேயுடன் பேச்சு நடத்தவேண்டுமெனவும் தெரிவித்தார். (01)

## தேர்தலுக்கான வேட்புமனு கோரப்பட்டது!

மத்திய மாகாணசபை மற்றும், ஊவா மாகாணசபை ஆகியவற்றுக்குத் தேர்தல் நடத்துவதற்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் 14 ஆம் திகதிமுதல், தாக்கல் செய்யப்படவுள்ளன.

இதற்கான அறிவிப்பை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நேற்றுமுன்தினம் வெளியிட்டார்.

எதிர்வரும் 14 ஆம் திகதிமுதல், 21 ஆம் திகதிவரை நண்பகல் 12 மணிவரை அப்பகுதிகளுக்கான தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் வேட்புமனுக்களை தாக்கல் செய்யமுடியும்.

இதன்படி மத்திய மாகாண சபைக்கு கண்டி மாவட்டத்திலிருந்து 30 உறுப்பினர்களும், மாத்தளை மாவட்டத்திலிருந்து 10 உறுப்பினர்களும், நுவரெலியா மாவட்டத்திலிருந்து 16 உறுப்பினர்களும், தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

ஊவா மாகாணசபைக்கு பதுளை மாவட்டத்திலிருந்து 21 உறுப்பினர்களும் மொனறாகலை மாவட்டத்திலிருந்து 11 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

# புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கு ஜே.வி.பியினர் ஒத்துழைக்க வேண்டும்!

## அஸ்கிரிய பீடாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

வடக்க - கிழக்குப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளப்படுவது அவசியம். இதற்கு ஜே.வி.பி. பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என கண்டி அஸ்கிரிய பௌத்த பீட மகாநாயக்க தேரர் உடுகம ஸ்ரீ புத்தரகித்த ஜே.வி.பியின் அமைச்சர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் புதிய அமைச்சர்களாகவும், பிரதி அமைச்சர்களாகவும் சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 8 பேரும் நேற்றுமுன்தினம் கண்டி அஸ்கிரிய பௌத்தபீடத்திற்கு விஜயம் செய்து, மகாநாயக்கதேரர்களைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவசாய நீர்ப்பாசன அமைச்சர் அனுரகுமார திஸநாயக்கா, கடற்தொழில் நீர்வள அமைச்சர் விஜேசிங்க, கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துநெத்து, கலாசார தேசிய விழுமியங்கள் அமைச்சர் விஜித ஹேரத் உட்பட பிரதி அமைச்சர்கள் நேற்று தலதா மாளிகைக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டனர்.

அஸ்கிரிய மகாநாயக்க தேரர் இவர்களுக்கு ஆசி வழங்கி உரையாற்றுகையில் -

புதிதாக அமைச்சர் பதவிகளை ஏற்றுள்ள நீங்கள், தேசத்திற்கு நற்பணியாற்ற வேண்டும் என்ற ஆர்வமும் ஆற்றலும் கொண்டுள்ளீர்கள்.

எதிர்காலத்தில் உங்கள் பணிகள் சிறந்தோங்கவேண்டும், பேதம் பிணக்குகளின்றி தேசத்தின் நலன் கருதி அனைவரும் ஒன்றுபட்டுச் செயலாற்றவேண்டும், நாடாளுமன்றத்தில் அண்மையில் இடம்பெற்ற சம்பவம் போன்று எதிர்காலத்தில் இடம்பெறக் கூடாது என்றார்.



அண்மையில் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்த அமெரிக்கத் தூதுவரை, யாழ். மாவட்ட இராணுவத்தளபதி சுசில் சந்திரபால சந்தித்தித்ததை படத்தில் காணலாம்.

# காயம் காரணமாகவே அக்தர் பந்துவீசவில்லை!

## மருத்துவக்குழு உறுதிசெய்தது

ராவல்பிண்டியில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட்போட்டியில் முதுகுவலியின் காரணமாக அக்தர் பந்துவீசமுடியாத நிலை இருந்ததாக மருத்துவக்குழு தெரிவித்தது.

தொடர் யாருக்கு என்பதை முடிவுசெய்ய ராவல்பிண்டியில் நடைபெற்ற இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான, மூன்றாவது டெஸ்ட்போட்டியின்போது, அக்தருக்கு முதுகில்காயம் ஏற்பட்டது.

இதனால், அக்தர் மூன்றாம் நாள் ஆட்டத்தின்போது, பந்துவீச களம்இறங்கவில்லை. ஆனால், 4 ஆவது நாள் ஆட்டத்தின்போது துடுப்பெடுத்தாட அக்தர் களம் இறங்கினார். இதனால், அக்தருக்கு ஏற்பட்ட காயம் குறிதது அணி நிர்வாகத்திற்கு சந்தேகம் எழுப்பியது.

இதுகுறித்து, விசாரணை நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட்சபை 4 பேர்கொண்ட மருத்துவக்குழுவை நியமித்தது. இந்தகுழு முன்பு கடந்த புதன்கிழமை அக்தர் ஆஜரானார்.

இந்த நிலையில், லாகூரில் உள்ள சௌகத் கான் நினைவு, புற்றுநோய் மருத்துவமனையைச் சேர்ந்த 4 பேர் கொண்ட இந்த மருத்துவ குழு அக்தருக்கு ஏற்பட்ட காயமானது தொடர்ந்து பந்து வீசியதால் ஏற்பட்டதாக கூறியுள்ளது.



இந்தபோட்டியில் இந்தியா வெற்றி பெற்று தொடரை கைப்பற்றிய. தோல்விக்குப் பின்னர் பேட்டியளித்த பாக். அணியின் கப்டன் இன்ஸமாம் அணியின், தோல்விக்கு அக்தர்தான் காரணம் என்றும், அணி மீது அவரது ஈடுபாடு குறிப்பிடும்படியாக இல்லை என்றும் குற்றம் சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் நியமிக்கப்பட்ட மருத்துவக்குழு வரும் வெள்ளிக்கிழமை தனது அறிக்கையை சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### இலங்கை அணிக்கு எதிராக

# சிம்பாப்வே வீரர்கள் கடுமையாக போராடினர்!

## அணித்தலைவர் தைபு கூறுகிறார்

(ஹராரே)

இளம் வீரர்களைக் கொண்ட சிம்பாப்வே அணி இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் கடுமையாகப் போராடியதாக சிம்பாப்வே அணியின் கப்டன் தைபு பாராட்டியுள்ளார்.



இலங்கை சிம்பாப்வே அணிகளுக்கு இடையேயான 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் நேற்று முன்தினம் முடிந்தது. இந்த தொடரில் 5 போட்டிகளிலும் இலங்கை அணி வெற்றிபெற்று தொடரைவென்றது.

இலங்கைக்கு எதிராக நடைபெற்ற 5 போட்டிகளிலும் தோற்றாலும், இளம் வீரர்களைக் கொண்ட சிம்பாப்வே அணிக்கு தனது பாராட்டுக்களை கைடி தெரிவித்துள்ளார்.

இது குறித்து சிம்பாப்வே கப்டன் தைபு அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது, கடினமாகப் போராடக்கூடிய குணம் கொண்ட வீரர்களை சிம்பாப்வே அணி தற்போது கொண்டுள்ளது. சிம்பாப்வே அணியில் உள்ள இளம் வீரர்கள் கடினமாகப் போராடுகின்றனர். கப்டன் என்ற முறையில் இது எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. சிம்பாப்வே அணியின் மோசமான பந்து வீச்சே தோல்விக்கு முக்கிய காரணம். தொடக்கத்தில் சிறப்பாக பந்துவீசினாலும், கடைசி 10 ஓவர்களில் எங்களுடைய பந்துவீச்சு படுமோசமாக இருந்தது என்று கூறினார்.

### 12 நாடுகள் பங்குபற்றும்

# ஐ.சி.சி சுற்றுப்போட்டி அயர்லாந்தில் நடைபெறும்

சர்வதேச கிரிக்கெட் சபை நடத்தும் கிரிக்கெட் சுற்றுபோட்டி அடுத்த ஆண்டு அயர்லாந்தில் நடைபெறவுள்ளது.

8 ஆவது ஐ.சி.சி. சுற்றுப்போட்டி அடுத்த ஆண்டு ஜூலை மாதம் அயர்லாந்தில் நடைபெறவுள்ளது. 12 அணிகள் பங்கேற்கும் இந்தப் போட்டியிலிருந்து 5 அணிகள், 2007 ஆம் ஆண்டு மேற்கு இந்தியத்தீவுகளில் நடைபெறவிருக்கும் உலகக்கோப்பைக்குத் தகுதி பெறும். இந்தப் போட்டியை நடத்துவதற்கான ஒப்பந்தத்தில் சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவர் ஈஷான்மணி, தலைமை நிர்வாகி மால்கம்ஸ்பீட் இருவரும் கையெழுத்திட்டனர்.

அயர்லாந்திலுள்ள பெல்பாஸ்ட், டப்லின் ஆகிய இடங்களில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்த இரண்டு இடங்களிலும் போட்டிகளை நடத்த அயர்லாந்து எடுத்த முடிவு மகிழ்ச்சியளிப்பதாக ஈஷான் மணி தெரிவித்தார்.

அயர்லாந்து கிரிக்கெட் வரலாற்றைப் பார்க்கும் போது, அயர்லாந்து கிரிக்கெட் சங்கம் ஒருங்கிணைந்த குழுவாக செயற்பட்டு வருகின்றது. இந்த நிலையில் அயர்லாந்தின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் போட்டிகளை நடத்த எடுத்திருக்கும் முடிவு மகிழ்ச்சி அளிக்கிறது என்றும் தெரிவித்தார். 2005 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.சி.சி சுற்றுப்போட்டியில் 12 நாடுகள் பங்கேற்கின்றன. இதற்கு முன்பு விளையாடிய அணிகளைவிட இந்தமுறை அதிக அணிகள் கலந்துகொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியில் முதல் 5 இடத்தைப் பிடிக்கும் அணிகள், 2007 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவிருக்கும் ஐ.சி.சி. உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் விளையாடத் தகுதிபெறும்.

2003 ஆம் ஆண்டு, தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்ற அணிகளைக் காட்டிலும் 2 அணிகள் கூடுதலாக அடுத்த உலகக்கோப்பையில் விளையாடவுள்ளன.

கடந்தமுறை நடைபெற்ற உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில், டெஸ்ட் அந்தஸ்து பெறாத நாடுகளின் அபாரமான திறமை வெளிப்பாட்டின் காரணமாக கூடுதலாக இரண்டு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# 13 ஆயிரம் பேர் பங்கேற்ற செஸ் போட்டி கியூபாவில்!

## உலகசாதனை நிலைநாட்டியது

ஒரே நேரத்தில் அதிகம்பேர் செஸ் விளையாட்டுக்கான உலக சாதனையை கியூபா ஏற்படுத்தியுள்ளது.

ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் 13,ஆயிரம் பேர் செஸ் வினையாடி புதிய கின்னஸ் சாதனை கியூபாவில் படைக்கப்பட்டுள்ளது. முன்னாள் உலக சாம்பியனும், கிராண்ட் மாஸ்டருமான அன்டோலி கார்போவ் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று ஒரே நேரத்தில் 11 போட்டியில் விளையாடினார். இதற்கு முந்தய உலக சாதனைகளையும் கியூபாவிலேயே ஏற்படுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. 2002 ஆம் ஆண்டு டிசம்பர் 7-ம் திகதி 1132 பேர் கியூபா தலைநகர் கயானாவில் ஒரே நேரத்தில் விளையாடி உலக சாதனை படைக்கப்பட்டு இருந்தது.

இந்த சாதனையை கியூபாவே முறியடித்துள்ளது குறிப்பிடத்தக்கது. முந்த்ய உலக சாதனையின் போது கியூபா அதிபர் பிடல் காஸ்ரோ செஸ் போட்டியில் கலந்துகொண்டார். ஆனால், இந்தமுறை அவர் கலந்துகொள்ளவில்லை.1975 முதல் 1985 வரை செஸ் போட்டியில் தனது ஆதிக்கத்தை செலுத்திய காஸ்பரோவ் செஸ் உலகின் ஜாம்பவானாக இருந்துவருகின்றார்.

# விளையாட்டு

# கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பம்!

யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே யாழ்.ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடாத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி, ஈ.எஸ்.பேரம்பலம் சக புத்திரர்கள் நிறுவன ஆதரவில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் யாழ் இந்தக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

30 ஓவர்களினைக் கொண்ட இச்சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விபரம் வருமாறு -

கலை 9.00 மணி:- ஸ்ரான்லி வி.க எதிர் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம்.

மாலை 1.00 மணி :- அரியாலை மத்திய விளையாட்டுக்கழகம் எதிர் கொக்குவில் மத்திய சனசமூக விளையாட்டுக்கழகம். (58)

# அபுதாபி கிரிக்கெட் சபை அதிகாரிகளை சந்திப்பதற்கு டால்மியா மறுப்புத் தெரிவிப்பு!

அபுதாபியில கிரிக்கெட் போட்டியில் இந்தியா விளையாட மறுத்துள்ளதைத் தொடாந்து, சுமார் நூறுகோடி ரூபாய் செலவில் அங்கு கட்டப்பட்டுள்ள ஸ்ரேடியத்தைப் பரபரப்பான இந்தியா - பாகிஸ்தான் போட்டியுடன் துவக்கும் அபுதாபி கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபையின் திட்டத்தில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இந்த மாதம் 14 ஆம் திகதி இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே காட்சி கிரிக்கெட் போட்டி அபுதாபியில் நடைபெறுவதாக அந்த நாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

ஆனால், இந்தப் போட்டியில் இந்திய வீரர்கள் விளையாட கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத் தலைவர் டால்மியா மறுத்துள்ளார். மேலும் இது குறித்து ஆலோசனை நடத்த, இந்தியா சென்ற அபுதாபி - கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத் தலைவர் பி.ஆர்.ஷெட்டியைச் சந்திக்க டால்மியா மறுத்துவிட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதனால், ஷெட்டி மிகவும் ஏமாற்ற மடைந்துபோயுள்ளார். இதனால், இந்தப் போட்டியை மூத்தோர் கிரிக்கெட் போட்டியாக நடத்த ஷெட்டி திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது. அதாவது இந்தியவீரர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டால், இந்தப் போட்டியை மூத்தோர் போட்டியாக நடத்த ஷெட்டி திட்டமிட்டுள்ளார்.

இது குறித்து ஷெட்டி கூறியிருப்பதாவது- இந்த விடயம் குறித்து டால்மியாவிடம் பேச வேண்டும் என்பதற்காக அவரைத் தொடர்பு கொள்ள முயற்சி செய்தேன். ஆனால், டால்மியா மறுத்துவிட்டார். ஆனால், நான் இன்னும் நம்பிக்கை இழநதுவிடவில்லை. இருப்பினும் பொறுத்திருந்து பார்ப்போம் என்று கூறினார்.

இந்த நிலையில், அபுதாபி போட்டியை நடத்துவது குறித்து அதிகாரப்பூர்வ விண்ணப்பம் ஏதும் தங்களுக்கு வரவில்லை என்று, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை செயலாளர் கருணாகரன் நாயர் தெரிவித்துள்ளார். அபுதாபி போட்டி நடைபெறுவது குறிதது தனக்கு எதுவும் தெரியாது என்று கப்டன் கங்கூலியும் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான இருதரப்பு கிரிக்கெட் போட்டிகள் மீண்டும் தொடங்கி இருந்தாலும், சார்ஜா போன்ற இடங்களில் விளையாடுவதில் விதிக்கப்பட்டுள்ள தடையை இந்தியா இன்னும் நீக்கல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சிம்பாப்வே பயணத்தை கிரஹாம்தோர்ப் பகிஸ்கரிப்பு!

சிம்பாப்வேக்கு பயணம் மேற்கொண்டால் அந்த பயணத்தில் இருந்து விலகுவது குறித்து பரிசீலனை செய்துவருவதாக இங்கிலாந்து வீரர் கிரஹாம்தோர்ப் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் சிம்பாப்வே பயணம் மேற்கொள்வதாக திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், அரசியல் காரணங்களுக்காக சிம்பாப்வே பயணத்தை ரத்துசெய்வது குறித்து இங்கிலாந்து பரிசீலனை செய்துவருகிறது.

ஆனால், எந்த ஒரு அணியும் தங்களது பயணத்திட்டத்தை ரத்துசெய்தால் அந்த அணிக்கு தடைவிதிக்கப்படும் என்றும், பெரும் தொகை அபராதமாக விதிக்கப்படும் என்றும் சர்வதேச கிரிக்கெட்சபை மிரட்டி இருக்கிறது. இந்தநிலையில் சிம்பாப்வே பயணத்தில் இருந்து விலகுவது குறித்து பரிசீலனை செய்துவருவதாக இங்கிலாந்து அணியின் கிரஹாம்தோர்ப் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அளித்துள்ள பேட்டியில் - சிம்பாப்வேயில் நடக்கும் சம்பவங்களில் எனக்கு உடன்பாடு இல்லை. எனவே இந்த விடயத்தில் நேர்மையான முடிவு எடுக்கவேண்டியது அவசியம்.

எனவே, இந்த தொடரில் நான் நிச்சயம் பங்கேற்பேன் என்பது பற்றி உறுதியாக கூற முடியாது. சிம்பாப்வே பயணம் மேற்கொள்வது குறித்து முடிவு எடுக்கும் விடயத்தில் நெருக்கடி இருப்பதாக கூறுவது சரியானதல்ல. இதுபற்றி அரசு முடிவு எடுக்காவிட்டாலோ, கிரிக்கெட்சபை முடிவு ஏதும் எடுக்காவிட்டாலோ, அரசியல்வாதியாக மாறவேண்டும் என்றால் உடனடியாக ஒரு முடிவை எடுத்துவிடலாம். ஆனால் கிரிக்கெட் வீரர் என்ற முறையில் என்னால் உடனடியாக எந்த முடிவையும் எடுக்கமுடியாது என்று கூறினார்.

இங்கிலாந்து அணியின் சிம்பாப்வே பயணம் குறித்து இங்கிலாந்து கிரிக்கெட்சபையுடன் வெளியுறவுச் செயலர் ஜக்ஸ்ரோ, கலாசாரத்துறை செயலர் டெஸ்கா ஜோவெல் இருவரும் வரும் செவ்வாய்கிழமை ஆலோசனை நடத்தவுள்ளனர்.

கடந்த ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கோப்பை போட்டியின் போது, சிம்பாப்வேயுடன் விளையாட இங்கிலாந்து மறுத்தது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் அவுஸ்ரேலிய அணி அடுத்த மாதம் சிம்பாப்வே சுற்றுப்பயணம் செல்கிறது. இந்த பயணத்தில் கலந்துகொள்ள அவுஸ்ரேலிய அணியின் சுழற்பந்துவீச்சாளர் ஸ்டுவர்ட் மக்கில் மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# இடைக்கால தன்னாட்சி சபை உடனடியாக வழங்கப்படவேண்டும்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகிறார்

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை உடனடியாக புதிய அரசு வழங்க வேண்டுமென - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து கருத்து வெளி யிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் இயல்பாகவும், நிம்மதியாகவும் வாழவும், யுத்தத்தால் சிதைந்த வடக்கு - கிழக்கை புனரமைக்கவும், விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகார சபையை வழங்குவது மிகவும் அவசியமென்று தெரிவித்தார்.

இதேவேளை நாளைமறுதினம் மாலை 4 மணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகளுடன் நோர்வே தூதுக்குழு பேச்சு நடத்தவுள்ளதாகவும், இச்சந்திப்பில் முன்பு பேச்சு வார்த்தை நிறுத்தப்பட்ட இடத்திலிருந்தே மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி விடுதலைப் புலிகள் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான யோசனையை முன்வைத்துள்ளார்கள். இதனை அரசு வழங்கிவிட்டு நிரந்தர அரசியல் தீர்வு தொடர்பாக பேசுவதே பொருத்தமானது என்பதை வலியுறுத்துவோமென தெரிவித்தார்.

இதனைவிட இயல்பு நிலமை தொடர்பாகவும் ஆராய்வோம். நோர்வே தூதுக்குழுவை சந்திப்பதற்கு முன்னர் நாம் எல்லோரும் கலந்துரையாடி சில முடிவுகளை எடுப்போமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



யாழ்.மருத்துவபீட மாணவர்களால் சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் தெற்கிலுள்ள கண்ணகி குடியிருப்பில் இலவச திருமணப்பதிவு நடத்தப்பட்டபோது - திருமணப் பதிவாளர் சி.குமாரவேல், மருத்துவபீட மாணவி ச.சிந்துஜா, சமுர்த்தி வலய உதவி முகாமையாளர் தே.விக்னேஸ்வரன், கண்ணகி குடியிருப்புத் தலைவர் இ.இராசதுரை மற்றும் யாழ்.மருத்துவபீட மாணவர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (68)

## யாழ்.போதனா வைத்தியசாலையில்

# சுகாதாரமற்றவகையில் தயாரித்த உணவுப் பண்டங்கள் விற்பனை!

யாழ்.போதனா வைத்தியசாலையில் சுகாதாரத்திற்குப் புறம்பான முறையில் ஐந்துக்கும் மேற்பட்ட நபர்களால் உணவுப்பண்டங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

அண்மைக் காலமாக யாழ். போதனா வைத்தியசாலைக்குள் தனி நபர்களால் தயாரிக்கப்பட்ட உணவுப்பண்டங்கள், குறிப்பாக நோயாளர்களைப் பார்வையிடும் நேரங்களில் அவர்களைப் பார்வையிடுபவர்கள்போல் சென்று விற்பனை செய்துவருகின்றனர்.

குறிப்பாக இந்த உணவுப் பொருட்கள் குழந்தைகளுக்கு சிகிச்சை பெறுவதற்காகவரும் உறவினர்களிடம் அல்லது தாய்மாரிடமே விற்பனை செய்யப்பட்டுவருகின்றது.

ஆரம்பத்தில் ஒரு சில நபர்களே இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டுவந்தனர். தற்போது ஐந்திற்கும் மேற்பட்டோர் விற்பனை செய்யும் அளவுக்கு வியாபாரம் களைகட்டியுள்ளது. சுகாதாரத்திற்குப் புறம்பான விற்பனையில் ஈடுபட்ட நபர்களைத் தடுக்கமுற்பட்ட பாதுகாப்பு ஊழியருக்கு எதிராக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவ்வாறான சுகாதாரத்திற்குப் புறம்பான உணவுப்பண்டங்களை உண்டவர்கள் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையின் 97 ஆவது நினைவு விழாவில் மதுரையிலிருந்து வருகைதந்த பண்டிதர் எஸ்.சச்சிதானந்தத்திற்கு தமிழ்த்துறை விரிவுரையாளர் எஸ்.சிவலிங்கராசா பொன்னாடை போர்த்துவதையும் விழா தலைவர் எஸ்.தர்மலிங்கம் மலர்மாலை அணிவித்து கௌரவிப்பதையும் படத்தில் காணலாம். (17)

# நெடுந்தீவு வெட்டுக்களிக்குளம் புனரமைப்புப்பணி ஆரம்பம்!

(நெடுந்தீவு)

'நியாப் திட்டத்தின்கீழ் நெடுந்தீவு வெட்டுக்களிக்குளம் புனரமைக்கும் ஆரம்பவேலைகள் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது.

முதற்கட்ட வேலையாக அணைகள் அமைக்கப்படவுள்ள பகுதியில் உள்ள புல்லுடன்கூடிய மேல் மண்ணை அகற்றும் வேலையே இடம்பெறவுள்ளது.

இந்த வேலைகள் முழுவதும் மக்கள் பங்களிப்புடனேயே மேற்கொள்ளப்படவேண்டும் எனவும், இதற்கென 340 தொழிலாளர்கள் தேவை எனவும் இதுதொடர்பாக கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கான மதிப்பீட்டு நிதியாக 68,290 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் முதல்நாள் வேலையின் போது நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஊழியர்களும் கலந்துசேவையாற்றுவார்கள் என அப்பகுதி மக்கள் மத்தியில் உரையாற்றிய அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (113)

# கரவெட்டி பிரதேச செயலக அடிக்கல் நாட்டு விழா

(வடமராட்சி)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டுவிழா கடந்த புதன்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்றது.

இந்தப் புதிய கட்டடம் யாழ். பருத்தித்துறைவீதியில் அமைந்துள்ள நாவலர்மடம் என்னும் இடத்தில் அமைக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத்திற்கான நிலம், கரவெட்டிப் பிரதேச மக்கள் அன்பளிப்புச்செய்த நிதியைக்கொண்டு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டது.

இந்தக் கட்டடத்திற்கான நிதியான ரூபா 4.5 மில்லியன் இப்போது பிரதேச செயலகத்துக்குக் கிடைத்துள்ளமையால் நவம்பர் மாதத்திற்குமுன் கட்டடம் கட்டி முடிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டடத்திற்கான அடிக்கல்லை அரச அதிபர் செ.பத்மநாதன் நாட்டி வைத்து உரைநிகழ்த்தினார். (13)

# வாக்காளர் இடாப்பு பிரதிகள் வழங்கப்பட நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

வாக்காளர் இடாப்பின் பிரித்தெடுத்தல் பிரதிகள் வழங்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

கடந்த வருடங்களுக்குரிய வாக்காளர் இடாப்பில் இருந்து பிரித்தெடுத்தல் பிரதியைப்பெற விரும்புவோர் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

பிரதி பெறுவதற்கான காரணம், வருடக் குறிப்புக்கள், திணைக்களத் தலைவர்களால் உறுதி செய்யப்பட்ட கடிதம் அல்லது கிராம, பிரதேச செயலாளர்களால், உதவி அரசாங்க அதிபர்களால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் அல்லது புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையினால் வழங்கப்பட்ட கடிதத்தின் உதவியுடன் பெற்றுக் கொள்ளமுடியும்

வாக்காளர் பிரித்தெடுத்தல் பிரதி பெறும் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்து தேசிய அடையாள அட்டை மூலமாக உறுதிப்படுத்தி, வாக்காளர் இடாப்பின் பிரித்தெடுத்தல் பிரதியைப் பெற்றுக்கொள்ளமுடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பிற்பகல் 1.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் மேலும் தெரிவித்தார்.

# தென்மராட்சிப் பகுதிகளில் வளர்ந்துள்ள பற்றைகளால் போக்குவரத்துக்கு இடர்பாடு!

தென்மராட்சிப் பிரதேசத்தில் காணப்படும் வீதிகள் தவிர்ந்த ஏனைய சிறுவீதிகள் பலவற்றில் போக்குவரத்து செய்யமுடியாதளவுக்கு பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றன.

பெரும்பாலும் பிரதேசசபை எல்லைக்குள் உள்ள இவ்வீதிகளின் மையப்பகுதிவரை வேலிகதிகால்களும் பற்றைகளும் மூடியுள்ளது. பெரும்பாலும் ஆட்களற்ற வீடுகளின் ஓரமும், வெறுங்காணிகளின் ஓரங்களிலுமே இவ்வாறு காணப்படுகின்றது.

மட்டுவில், சரசாலை, கல்வயல் பகுதிகளில் உள்ள சிறுவீதிகளும் ஒழுங்கைகளும் இவ்வாறு காணப்படுவதால் போக்குவரத்து செய்வதில் மக்கள் பெரும் இடர்பாடுகளைச் சந்தித்து வருகின்றனர்.

தத்தம் வீடுவளவுகளையும், காணிகளையும் சுத்தம்செய்துவரும் மக்கள் - தத்தமது வேலியோரமுள்ள பற்றைகளையும் பொது நோக்கோடு துப்புரவு செய்வார்களாயின் இந்நிலை தவிர்க்கப்படலாம் எனப் பொதுமக்கள் கருத்து வெளியிட்டனர்.

பிரதேசசபையோ அல்லது நகர சபையோ செய்யும் என எதிர்பார்ப்பதில் எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை. இதை உணர்ந்து மக்கள் தத்தமது வீடுகள் காணிகளுக்கு முன்னாலுள்ள வீதிப்பகுதியை மட்டுமாவது துப்புரவு செய்வார்களாயின் பேருதவியாக இருக்கும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (24)

## வல்லிபுர ஆலயத்தில் கதாபிரசங்கம்

(வடமராட்சி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவான் மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் இன்று மு.ப. 10 மணிக்கு சைவப் புலவர் கீழ்க்கரவையூர் நவரத்தினம் ஆசிரியர் 'வல்வினை தீர்க்கும் விநாயகன்" என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் செய்யவுள்ளார்.

## கட்டட வேலைகள் பூர்த்தியாகவில்லை

(உடுவில்)

உடுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் அதிபர் அலுவலகம் அமைப்பதற்காக கடந்த மூன்று வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட கட்டடம் பூர்த்திசெய்யப்படாது மாணவர்களின் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பிடமாகக் காணப்படுகிறது.

முன்னர் கிடைத்த நிதிமூலம் கட்டடம் கட்டப்பட்டபோதும் - மீதி வேலைகளைச் செய்துமுடிப்பதற்கு நிதியுதவி வழங்க எவரும் முன்வராமையால் கட்டடம் இடைநடுவில் பூர்த்திசெய்யப்படாதுள்ளமை குறிப்பிடத்தக்கது. (101)

# ஊடகவியலாளர் கல்வியாதாரக்கொடைக்கு ஆர்வமுடையோர் விண்ணப்பிக்கலாம்!

2004 ஆம் ஆண்டில் பனொஸ் தெற்காசிய அமைப்பு ஆய்வு மற்றும் விசாரணைகள் மூலம் சிங்கள, தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில் முரண்பாட்டுப் பிரச்சினைகள் சம்பந்தமான தரமான ஆய்வுக் கட்டுரைகள், நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதில் ஈடுபடும் விருப்புக்கொண்ட இலங்கை பத்திரிகை, வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடகவியளாளர்களுக்கு 10 கல்வியாதாரக் கொடைகளை வழங்கவுள்ளது.

தெரிவுசெய்யப்படும் ஊடகவியலாளர்கள் 12 மாதங்கள் கொண்ட கல்வியாதாரக்கொடைக் காலப் பகுதியில் மாதம் 8000 ரூபாவை நிதியுதவியாகப் பெற்றுக்கொள்வர்

ஆர்வமுள்ளோர் சுயவிபரத்துடன் முரண்பாடு சம்பந்தமான ஐந்து வரையிலான பிரசுரிக்கப்பட்ட ஒலி, ஒளிபரப்புச் செய்யப்பட்ட மாதிரிகள் ஒலி ஒளி நாடாக்களையும் -

விண்ணப்பதாரி ஏன் கவனத்தில் கொள்ளப்பட வோண்டுமென்பதை விளக்கும் 500 சொற்கள் கொண்ட கடிதம், தாம் கல்வியாதாரக்கொடைக்குத் தெரிவு செய்யப்படின் கவனம் செலுத்தவுள்ள தலைப்பு என்ன என்பதையும், தொழில்சார் செயற்பாடு ரீதியில் நன்கறிநத இருவரின் கடிதங்களுடன் -

'கருத்திட்டக் கூட்டிணைப்பாளர்' பனொஸ் தெற்காசிய அமைப்பு, 1559 டாக்டர் டி சில்வா மாவத்தை கொழும்பு 8. என்னும் முகவரிக்கு எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்கப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் பார்வையிடலாம்.

# வீதி விபத்தில் முதியவர் காயம்!

மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் சைக்கிளில் வந்த முதியவர் ஒருவர் காலில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சுழிபுரம் சந்திக்கு அண்மையாக மாலை 5.00 மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தின்போது ஜெயசுந்தரம் (வயது 67) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - சுழிபுரச்சந்திக்கு அண்மையாக சைக்கிளில் வந்த நபரின் மீது மோட்டார் சைக்கிளில் வந்த நபர் மோதியதிலேயே மேற்படி விபத்து ஏற்பட்டது என தெரிவிக்கப்படுகின்றது.

## விளையாட்டு அரங்கம்

# தைபு: அவன் கில்லி

இலங்கை அணிக்கும் சிம்பாப்வே அணிக்கும் இடையில் ஐந்து ஒருநாள் போட்டிகளைக் கொண்ட தொடர் ஒன்று



"பால்குடிப் பருவம்"

இடம்பெற்றுள்ளது. இந்தத் தொடரில் இலங்கை அணி 5:0 என்ற அடிப்படையில் சிமபாப்வே அணியை வென்று தொடரைக் கைப்பற்றியுள்ளது.

அவுஸ்ரேலியா அணியுடன் டெஸ்ட் போட்டித் தொடரையும், ஒருநாள் போட்டித் தொடரையும் இழந்த இலங்கை அணிக்கு இந்த வெற்றி மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கின்றது.

இலங்கை அணி 12,71,25 ஆகிய ஓட்டங்களினால் மூன்று போட்டியில் வெற்றியைப் பெற்றுள்ளது. மற்றைய இரண்டு போட்டிகளிலும் 9 விக்கெட்டுக்களால் வெற்றியைப் பெற்றிருக்கின்றது.

இலங்கை அணியைப் பொறுத்தவரையில் இலங்கைக்கு வெளியே ஐந்து போட்டிகளையும் வென்றமை, இலங்கையின் கிரிக்கெட் வரலாற்றில் பெருமைப்படக்கூடியதே.

இந்த நிலையில் இலங்கையின் அணித் தலைவர் மாவன் அத்தப்பத்து பெருமைக்குரியவராகின்றார். உதவித் தலைவர் ஜெயவர்த்தன சிறப்பிற்குரியவராகின்றார். சமிந்த வாஸ், முரளிதரனோடு பந்து வீசுவதற்கு இளம் பந்துவீச்சாளர்கள் கைகொடுத்துள்ளனர். ரஞ்சித் ஹேரத் பந்து வீச்சில் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார். ஆரம்ப துடுப்பாட்ட வீரராக ஜயந்த தனது திறமையைக் காட்டியுள்ளார்.

இவ்வளவு நடந்திருக்கின்றது. ஆனால், போட்டித் தொடரை இலங்கை அணி வென்ற போதும், போட்டித் தொடர் நாயகன் விருது இலங்கை அணியைச்சேர்ந்த ஒரு வீரருக்கும் கிடைக்கவில்லை. இங்கேதான் விடயமே இருக்கின்றது.

இந்தப் போட்டிகளின் தொடர் நாயகனாக அறிவிக்கப்பட்டவர் சிம்பாப்வே அணியின் இளம்புயல் அணித்தலைவர் தைபு. அவரின் அற்புதமான விக்கெட் காப்பு, துடுப்பாட்டம், அணித் தலைமை, இடையே பந்து வீச்சு என்பன இவரைப் போட்டித் தொடர் முழுவதுமே பிரகாசிக்கச் செய்தது.



தைபு
"ஹீரோ நம்பர் வண்"

இவை யாவற்றுக்கும் தைபுவுக்கு ஆட்டத் தொடர் நாயகன் விருது கொடுக்கப்பட வேண்டியதே. இதிலும் முதன்மையான ஒரு காரணம் உள்ளது. அதற்காகத்தான் தைபுவுக்கு ஆட்டத் தொடர் நாயகன் விருது வழங்கப்பட்டுள்ளது.

ஒரு அணி கிரிக்கெட் சுற்றுலாவுக்கு சொந்த நாட்டில் வந்து இறங்குகின்றது. சிரேஷ்ட வீரர்கள் போட்டியில் கலந்துகொள்ளவில்லை என்று போராட்டம் செய்கின்றார்கள்.

அணியின் கௌரவம், நாட்டின் கௌரவம் பாதிப்படையப் போகின்றது. இலங்கை அணியுடன் திட்டமிட்டபடி கிரிக்கெட் போட்டிகளை நடத்தியே ஆகவேண்டும். இல்லையேல் சிம்பாப்வே நாட்டிற்கு அது இழுக்காகும்.



"குளிரடிக்குதா"

சிம்பாப்வேயில் காணப்படும் இன ரீதியான பாகுபாடும், அந்நாட்டில் நிலவும் அரசியல் நிலைமைகளும் கிரிக்கெட் போட்டிகள்வரை சென்றுள்ளது.

இந்த நிலையில் முதலில் விளையாடுவோம், பின்னர் யோசிப்போம் என்று அணித் தலைமைப் பொறுப்பை ஏற்று விளையாடியுள்ளார் தைபு. அவருக்கு அதற்காகவும் தொடர் நாயகன் விருது கொடுக்கப்படவேண்டியதே.

தொடர் நாயகன் விருதுக்கு தேர்ந்தெடுக்க அமைக்கப்பட்ட குழுவின் சரியான இந்த முடிவை இலங்கை அணி வீரர்கள் மாத்திரமல்ல, கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள்.

ஒருநாள் போட்டித் தொடரை வென்ற இலங்கை அணிக்கு இன்னொரு சவாலும் காத்திருக்கின்றது. அது சிரேஷ்ட வீரர்களைக் கொண்ட சிம்பாப்வே அணியுடன் டெஸ்ட் போட்டியை வெல்ல வேண்டிய கட்டாயம்.

அவ்வாறு வெல்வதன்மூலம்தான் ஒரு நாள் தொடர் வெற்றியையும் இணைந்து கொண்டாட முடியும். சிம்பாப்வே அணி கட்டாயமாக டெஸ்ட் தொடரை வெல்வதற்கு கடும் முயற்சி எடுக்கும். இலங்கையணிக்கும் அதற்கு ஈடுகொடுத்து விளையாட வேண்டிய பொறுப்பு உள்ளது.

- வெண்மதி -

# நாமே எமக்கு எதிரி

மிக அண்மையில் சர்வதேச கிரிக்கெட் தொடரில் ஏற்பட்ட மிகப்பெரும் அதிர்ச்சியான சம்பவம் சிம்பாப்வே கிரிக்கெட் அணியிலிருந்து சர்வதேசத்தரம் வாய்ந்த பதினைந்து வீரர்கள் திடீரென்று வேலை நிறுத்தம் செய்ததுதான். இதற்குக் காரணமாக இருந்தது சிம்பாப்வே கிரிக்கெட் தெரிவுக் குழுவின் சீர்கேடுகள் குறித்து ஹீத் ஸ்ரீக் குரல் எழுப்ப, அவர் அணியின் இருந்து நீக்கப்பட்டார். இதன் தொடர்ச்சியாக இலங்கை - சிம்பாப்வே அணியை ஏறி மிதித்து உழக்கிக் கொண்டிருக்கிறது.

இதற்கு முன்னதாக சிம்பாப்வே கிரிக்கெட் சபை மற்றும் வெள்ளை இன வீரர்களின் கருத்து முரண்பாடானது, வெறுமனே கிரிக்கெட் தொடர்பான அபிப்பிராய பேதமல்ல. அதற்கு மேலாகச் சிம்பாப்வே வாழ் சிறுபான்மை இன வெள்ளை இனத்தவருக்கும்,



ஹீத் ஸ்ரீக் - "துயரங்கள் தீருமா"

பெரும்பான்மை கறுப்பு இன மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட இன முரண்பாடாகும். இன்னும் சிறிது அப்பால் சென்றால், மண்ணின் மைந்தர்களான கறுப்பின மக்களின் தாயகத்தையும், மக்களையும் அடக்கியாண்ட வெள்ளை இன (பிரித்தானிய) மக்களின் ஏகாபத்தியத்தின்பால் இந்தச் சர்ச்சை சென்று நிற்கும்.

எனவே, இதனை வெறும் பந்தும் துடுப்பும் கொண்ட ஒரு பிரச்சினையாகக் கருதிவிட முடியாது. இரத்தமும் தசையும் சார்ந்த பிரச்சினை இது.

எது எவ்வாறாயினும், சர்வதேச கிரிக்கெட்டைப் பொறுத்து இந்தநிலை ஆரோக்கியம் அற்றதுதான். இதேபோன்ற அல்லது இதைவிடவும் உக்கிரமாக கூர்ப்புக் கொண்டமைந்திருந்த தென் ஆபிரிக்க நாட்டில் இதேபோன்ற நிலைமைகள் மிகவும் சாதுரியமாகக் கையாளப்பட்டு, கிரிக்கெட் அணி உலகின் இரண்டாம் இடத்தில் வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறது. அப்படியென்றால், சிம்பாப்வே அரசியல் தலைவர்கள் இந்தப் பிரச்சினையைக் கையாண்ட விதத்தில் ஏதோ தவறு விடுகிறார்கள் என்று கொள்ளலாமா?

இது ஒருபுறம் இருக்க, ICC உலகக் கிரிக்கெட்டைப் பொறுத்து வகைகூறவேண்டிய நிலையில் இருப்பதால், சிம்பாப்வே விடயத்தில் இதன் பங்கு நிரம்பவுள்ளது. ICC தற்போது பார்வையாளராக இருந்துகொண்டு, நல்லதே நடக்கும் என்று ஆன்மீகம் பேசிக் கொண்டிருக்கிறது. நடுவரை முறைத்துப் பார்த்தால், முழங்கையைக் கொஞ்சம் நீட்டிப் பந்து வீசினால், சந்தோசத்தில் மிகையாகக் குதித்தால் - ICC ஹிட்லர் பாணியில் முறைத்துப் பார்க்கிறது. ஆனால், பார்க்கவேண்டிய விடயங்களைப் பார்க்க மறுக்கிறது. அல்லது அதற்கான விலை பல மில்லியன் டொலராக இருக்குமென்று பணத்தால் பேசுகிறது. ICC என்ன சர்வதேச வியாபாரம் செய்கிறதா? என்று குமுறுகிறார் ஒரு விமர்சகர். ICC இப்படி மதில் மேல் பூனை விளையாட்டுச் செய்தால், இன்னும் பல "இந்த நிமிடத்து" சிம்பாப்வே அணிகள் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் தோன்றும். கிரிக்கெட் அழியும்.

இறுதியாக எமக்குள் பிரச்சினை இருந்தால் நாம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற வகையில் தென் ஆபிரிக்க அணி தன் விடயங்களைத் தீர்த்துக் கொண்டிருப்பது அதிசயிக்கத்தக்கதுதான். என்ன செய்வது எல்லா நாடுகளுக்கும் நெல்சன் மண்டேலாக்கள் தலைவர்களாக் கிடைப்பார்களா என்ன?

- ஜோசப் கிருஷ்ணா -

# கரை தாண்டும் மீன்

பெயர் புதிதுதான் ஆனால், கீர்த்திபெரிது. அவர் பெயர் கொன்ராட் பிரான்ஸில். பாகிஸ்தானில் நடந்துமுடிந்த SAF விளையாட்டுப் போட்டிகளில் நீச்சல் போட்டிகளில் இவர் பெற்றுக்கொண்ட பதக்கங்கள். அது இரண்டு தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலம் இதில் விசேடம் என்ன வென்றால், இவரது நீச்சல் வேகங்கள் ஆவணியில் நடைபெறவுள்ள எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் இவர் பங்குபற்றும் தகுதியைக் கொடுத்துள்ளன என்பதுதான். இவர் 100m BUTTERFLY STROKE நீச்சலை 56.35 செக்கனிலும் (சாதனை நேரம்), 50m BUTTERFLY STROKE நீச்சலை 26.11 செக்கனிலும் நீந்தி முடித்துள்ளார். 100m மற்றும் 50m BREAST STROKE நீச்சலில் இரண்டு வெள்ளிகள், 4x100 FREE STYLE நீச்சல்களிலும் 4x100 FREE STYLE நீச்சல்களிலும் 4x100 தனி MEDLEY அஞ்சலில் இரண்டு வெண்கலம் என்றும் கணக்கு முடிக்கிறார். இவரது சிறப்புக்கு சிறப்பு செய்வது - இவர் நீச்சல் பயிற்றுநராக இருப்பது மட்டுமன்றி இவரது கல்வித் தகைமையுமாகும். இவர் பூர்த்தி செய்துள்ள உயர் கல்வித் தகைமை COMPUTER SYSTEM AND ELECTRONIC ENGINEERING COURSE என்பதாகும். மறுபுறம் இவர் பங்கு கொண்ட போட்டிகள் ஒலிம்பிக், உலக சாம்பியன்ஷிப், ஆசிய விளையாட்டுப் போட்டிகள், பொது நலவாய விளையாட்டுப் போட்டிகள், ஆசிய பசுபிக் போட்டிகள், ஆசிய வயதுப் பிரிவுப் போட்டிகள் மற்றும் SAF போட்டிகள். இவர் தனது தொழிற்துறையில் (விளையாட்டு) பெறவிருக்கும் தகுதி SPORTS AND RECREATION MANAGEMENT AND SCIENCE (அவுஸ்ரேலியாவில்) சிறப்பாக இவரது ஆரம்பகாலம்பற்றிக் குறிப்பிடுகையில் - இவர் கொழும்பு சென்.ஜோசப் கல்லூரி பழைய மாணவர் என்பதுடன், அங்குதான் இவரது நீச்சல் வாழ்க்கை ஆரம்பமாகின்றது என்பதும் மிகவும் பெருமிதமான ஒன்று.



கொன்ராட் பிரான்சிஸ்
"கீர்த்திபெரிது"

- லிவிங்ஸ்ரன் -

# நீங்கள் இல்லாமலா

இன்னும் ஒரு சில மாதங்கள் மட்டுமே இருக்கின்றன, 2004 ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கு. இனிவரும் நாட்களில் தடகளப் போட்டிகளில் சாதனை படைத்தவர்களின் பெயர்கள் பரவலாக அடிபடும். அதிலும் அமெரிக்க தடகள வீராங்கனை மரியன் ஜோன்ஸ் முதலிடம் பெறுவார் என்பதில் சந்தேகமில்லை. இருந்தும் மகப்பேற்றைத் தொடர்ந்து எட்டு மாதங்களின் பின் வெளியக தடகளப் போட்டியொன்றில் 200m ஓட்டத்தில் அவர் தோல்வியுற்றது. அதிர்ச்சியான செய்தி. இரண்டு உள்ளகத் தடகளப் போட்டிகளில் 60m ஓட்ட நிகழ்வில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுக்கொண்டவர், தற்போது நான்காவது இடத்தையே பெற்றுக்கொண்டுள்ளார். முதலாவதாக வந்தவர் அமெரிக்க வீராங்கனை கொனிமூர் (22.71 செக்). கிறிஸ்ரல் கொக்ஸ் (22.91 செக்), ரொனைட் டயர் (22.99 செக்). ஆனால், மரியன் ஜோன்ஸ் எடுத்துக் கொண்டநேரம் 23.02 செக்கன். குழந்தை பிறந்த பின் எனது ஓட்ட வேகம் குறைந்துவிட்டது என்பதை நான் உணர்கிறேன். இதிலிருந்து மீண்டெழ வேண்டிய அவசியத்தையும் உணர்கிறேன் என்பவர், குழந்தை பெறுமுன் 24 மணிநேரமும் விளையாட்டுத்துறை பற்றியே யோசித்தேன். ஆனால், இப்போது அப்படி முடியவில்லை. தாய்மை என்பதே பெரிதாகத் தெரிகிறது என்கிறார் மரியன். 2004 ஏதென்ஸ் போட்டிகளில் குறைந்தது ஐந்து தங்கம் வெல்லவேண்டும் (அஞ்சலோட்டங்கள் உட்பட) என்று மரியன் கூறியதாக முந்தைய செய்திகள் கூறின. தற்போது வேறுமாதிரியாக மரியன் பேசுகிறார். ஆனால், மரியன் இல்லாத ஒலிம்பிக்ஸ் சுவையாக இருக்காது. பல இலட்சம் ரசிகர்களை மரியன் ஏமாற்றமாட்டார் என்று நம்பலாம்.

- ரோஜா -



மரியன் ஜோன்ஸ்
"பத்தாவது கோல் செட்னா"

# நீ ஒரு தூஸ்ரா

இந்த நிமிடத்தின் முரண்பாடுகளின் நாயகர்கள் முரளியும், அக்தரும்தான். முரளிக்கு சர்வதேச கழுத்தறுப்பு, அக்தருக்கு உள்வீட்டு கறுத்தறுப்பு. மஞ்சள் கண்ணாடி போட்டவன் மாதிரி எதற்கெடுத்தாலும் அக்தர் கூடாது என்று கத்திக் கொண்டிருக்கிறார்கள் பாகிஸ்தான்காரர்கள்.

இப்போது ஒரு உண்மை தெரிகிறது. மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அக்தர் சரிவர அறுவடை செய்யாமைக்குக் காரணம், அவரது விலாவில் சிறிய விரிசல் ஒன்று இருந்தது என்பதே. ஆகவே விளையாடாமல் விட்டது சரி. சோஹெய்ப் அக்தர் ஒரு தனித்துவமான மனிதன். அவரிடம் எல்லோராலும் கவரப்படும் பல அம்சங்கள் உண்டு. உலகின் அதிவேக பந்து வீச்சாளன், யாருக்கும் தலைவணங்காத குணம், விக்கெட் சரித்ததும் கொண்டாடும் புதுப்பாணி, விமானம் தரையிறங்கும் அழகில் ஒரு பாணி, சரளமான ஆங்கிலம். கலகலப்பான இயல்பு, வரையறைக்கப்பாலும் பிழைவிடாமல் வாழ்ந்தால் தப்பில்லை என்ற வாழ்க்கைமுறை. விடயங்கள் பற்றி ஆராய T.V.வர்ணனையாளர்கள் இவரைத்தான் வளைத்தும் பிடிக்கிறார்கள். இவையெல்லாம் இவரை கிரிக்கெட் உலகின் ஒரு நாயகனாகவே மாற்றி இருக்கின்றது.

இதனைத்தானோ என்னவோ அவர் சில செயல்களைச் செய்யும்போது அது குற்றமாகவே பார்க்கப்படுவதுபோலத் தெரிகிறது. இதனை எமது மொழியில் "கைபட்டால் குற்றம் கால்பட்டால் குற்றம்" என்றதொரு பாணியில்தான் நோக்கவேண்டும்போல இருக்கிறது. கிரிக்கெட்டில் தாங்கள்தான் கூர்முடி என்று சில வெள்ளைநாடுகள் கொக்கரித்துக்கொண்டு, எங்களையெல்லாம் மட்டந்தட்ட முயற்சிக்க, அதற்கும் மேலாக நமக்கு நாமே காலைவார முயற்சிப்பது மிகவும் துயரமானதுதான்.

- துஷி -


சொஹெய்ப் அக்தர் - "தனிரகம்"

# தங்கம் தேடும் அம்மாக்கள்

ஒலிம்பிக் போட்டிகள் நெருங்க நெருங்க புதிய புதிய நட்சத்திரங்களும் மின்னத் தொடங்குவது சகஜமே. இதோ இன்னொரு நட்சத்திரம். அவரின் பெயர் டெனிஸி லூயிஸ். நீளம் பாய்தலில் ஒலிம்பிக் தங்கம் வென்ற மரியன் ஜோன்ஸுடன் சமதையாகப் பேசப்படுபவர் இவர். டெனிஸியின் ஒலிம்பிக் பதக்கம் வென்ற இன்னொரு நிகழ்வும் உண்டு. அதுதான் 100 m தடைதாண்டல் ஓட்டப் போட்டி. டெனிஸி கருத்துக்கூறும்போது - இங்கிலாந்தில் இந்த மாதம் நடைபெறவுள்ள நீளம் பாய்தலில் மரியனுடன் போட்டியிடுவது என்பது இன்னும் இன்னும் பலம் சேர்ப்பதாக அமையும் எனும் டெனிஸி, கேட்ஷெட் போட்டிகள் எனது இரண்டு ஒலிம்பிக் நிகழ்ச்சிகளிலும் இன்னும் மெருகூட்ட உதவும் என்று நம்புகிறேன்.

இவரைப் பற்றி இங்கு குறிப்பிட முக்கிய காரணம் ஒன்றுண்டு - 2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக்கில் 100m தடை தாண்டலில் தங்கம் வென்ற ஒரு வருடத்தின் பின், ஒரு மகளை ஈன்றெடுத்தார். இவர் இப்பொழுது 2004 ஆம் ஆண்டு மீண்டும் மரியன் ஜோன்ஸ் ஏதென்ஸ் நோக்கிப் புறப்பட்டதுபோல, டெனிஸியும் புறப்பட்டிருக்கிறார். எனவே, 2004 ஏதென்ஸில் நீளம் பாய்தல் போட்டியில் பெறப்படும் தங்கப் பதக்கம் மரியன் ஜோன்ஸின் மகனின் கழுத்தை அலங்கரிக்குமா? அல்லது டெனிஸி லூயிஸின் மகளின் கழுத்தை அலங்கரிக்குமா? என்பதுதான். சுவையான ஊகம் ஒன்று நிச்சயம். அந்தப் பதக்கம் அமெரிக்காவுக்குப் போகப் போகிறது என்பதுதான்.

- நிம்மி -


டெனிஸி லூயிஸ் - "மரியனுக்குச் சவால்"

# மௌனமாகவே சாதனைகள்

இலங்கை மற்றும் சிம்பாப்பே அணிகளுக்கு இடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹராரே மைதானத்தில் இடம்பெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியின்போது, இலங்கை அணி தனது சாதனையை மீண்டும் புதுப்பித்துள்ளது.

சிம்பாப்பே அணியை 35 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்கச் செய்வதன்மூலம், கடந்த உலகக்கிண்ணப் போட்டிகளின்போது கனேடிய அணியினை 36 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கச் செய்து, ஏற்படுத்திய சாதனையைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிம்பாப்பே அணியுடனான போட்டியின்போது முறியடித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் வரலாற்றிலே அதிகப்படியான சாதனைகள் இலங்கை அணியினாலும் இலங்கை அணி வீரர்களாலும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

1997 - 1998 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கொழும்பு பிரேமதாஸா விளையாட்டரங்கில் இடம்பெற்ற இந்திய அணியுடனான டெஸ்ட்போட்டிகளின் போது, 6 விக்கெட்டுக்களை இழந்து 952 ஓட்டங்களைப் பெற்று, சாதனைபடைத்த இலங்கை அணி, 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியின்போது கென்ய அணக்கு எதிராக 5 விக்கெட்டுக்களை இழந்து 398 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதன்மூலம் ஒரு நாள்போட்டிகளின் போதும் அதிக ஓட்டங்களைப் பெற்ற அணி என்ற சாதனையை நிலைநாட்டியுள்ளது.



சமிந்தவாஸ் - "வானம் என் வசம்"

இதே சமயம் டெஸ்ட் போட்டிகளின்போது, இரண்டாவது விக்கெட்டுக்கான இணைப்பாட்ட சாதனையை இலங்கை அணி வீரர்களான சனத்தும், மகாநாமவுமே ஏற்படுத்தியுள்ளனர். இவர்கள் இருவரும் இணைந்து, 1997, 1998 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்தியாவுக்கு எதிராகப் பெற்றுக்கொண்ட 576 ஓட்டங்களை டெஸ்ட்போட்டிகளின்போது, இரண்டாவது விக்கெட்டுக்கான இணைப்பாட்ட சாதனையாகும்.

இலங்கை அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் - சனத் ஜெயசூரியா ஒருநாள் போட்டிகளின் போது, அதிவேகமாக அரைச் சதத்தைப் பெற்றவர் என்ற சாதனையும், ஒருநாள் போட்டிகளின் போது அதிகூடிய 6 சிக்ஸர்களை அடித்தனர் என்ற சாதனையையும் நிலைநாட்டியுள்ளார். பாகிஸ்தான் அணிக்கு எதிராகப் 17 பந்துகளில் 50 ஓட்டங்களைப் பெற்று இந்தச் சாதனையைப் படைத்த சனத், இதே பாகிஸ்தான் அணிக்கு எதிராக ஒருநாள் போட்டிகளின்போது, பெற்றுக்கொண்ட 11 சிக்ஸர்களே ஒருநாள் போட்டிகளில் பெறப்பட்ட அதிகப்படியான சிக்ஸர்களாகும்.

இதேபோன்று பந்துவீச்சுச் சாதனைளிலும், இலங்கை அணியே முன்னிலை வகிக்கின்றது.

டெஸ்ட்போட்டிகளின்போது, 10 விக்கெட்டுக்களைக் கூடியமுறை கைப்பற்றியவர் என்ற சாதனையை இலங்கை அணியின் வீரர் முத்தையா முரளிதரனே நிலைநாட்டியுள்ளார். இதேசமயம் ஒருநாள் போட்டிகளின்போது, சிறந்த பந்துவீச்சு என்ற சாதனையை இலங்கை அணியின் ஆரம்பப் பந்துவீச்சாளர் சமிந்தவாஸே ஏற்படுத்தியுள்ளார். 2002 ஆம் ஆண்டு - சிம்பாப்வே அணிக்கு எதிராக 19 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து, 8 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய சமிந்த வாஸ், கடந்த உலகக்கிண்ணப் போட்டியின்போது, பங்களாதேஷ் அணிக்கு எதிராக முதலாவது ஓவரின் முதல் மூன்று பந்துகளிலும் விக்கெட்டுக்களை வீழ்த்தி அற்புதமான சாதனைப் படைத்துள்ளார். அதேசமயம் அந்த ஓவரில் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி, ஒரு ஓவரிலே 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவர் என்ற சாதனையும் படைத்துள்ளார். இதேசமயம் பல சாதனைகளைப் படைத்துள்ள இலங்கை அணியின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் மேற்கிந்திய வீரர் கொட்னிவோல்சின் சாதனையை எதிர்வரும் 6 ஆம் திகதி சிம்பாப்பே அணிக்கெதிரான டெஸ்ட்போட்டிகளின்போது முறியடித்து, டெஸ்ட்போட்டிகளில் அதிகூடிய விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வீரர் என்ற சாதனையைப் படைப்பார் என்பது திண்ணம்.

- லெஸ்லி -

# ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

01. இலங்கை - சிம்பாப்வே ஒருநாள் போட்டி "ஆட்டத் தொடர்" நாயகன் யார்?

02. இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவர் யார்?

03. இந்திய - பாகிஸ்தான் டெஸ்ட் தொடரில் முச்சதம் போட்டவர் யார்?

**விளையாட்டுப் புதிர் - 09**

**விண்ணப்பப்படிவம்.**

முழுப்பெயர்:- ..................................................

முகவரி:- ..................................................

01.

02.

03.

விடைகள் எழுதப்பட்ட இவ் விண்ணப்பப் படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு, 07.05.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

*விலாசம்:- விளையாட்டுப் புதிர் - இல. 09,*
*நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

## விளையாட்டுப் புதிர் இல. 08 இன் விடைகள்

1) ரென்னிஸ் விளையாட்டு.
2) தூஸ்ரா.
3) சிம்பாப்வே.


**பரிசு பெற்றவர்**
க.நவநீதன்
11∴2 துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

அனுசரணை:- ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
(விளையாட்டு உபகரண விற்பனையாளர்)
YONEX MULTI PALACE
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021-2227648, 0777166894.

தெற்குத்திசையிலிருந்து...

இந்திரஜித்

# இரட்டைச் சமாளிப்பு விடயங்களை முன்னெடுக்கும் புதிய அரசாங்கம்



**நா**ட்டில் தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளும், அதனை சிறுபான்மை அரசாங்கம் கையாளும் விதமும், தற்போது வாக்காளர்களை திருப்திபடுத்துவதற்காக மாத்திரமே உதவப்போகிறது என்ற கருத்து இலங்கையில் எழுந்துள்ளது.

நாட்டின் இனப்பிரச்சனை பாரிய சவாலாக நிற்கும் நிலையில், அதற்கு இடையில் வாழ்க்கைச் செலவு, மற்றும் வேலைவாய்ப்பு என்பன பூதாகரமாக தோற்றம் அளிக்கின்றன. இவ்வாறான இரண்டாம் கட்ட பிரச்சினைக்குத் தீவைக்காண வேண்டுமானால் முதலாம் நிலைப்பிரச்சனையான இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட வேண்டியது அவசியமாகும்.

இதிலும் நாட்டின் வளங்கள் அருகிப் போயுள்ள நிலையில், இருக்கின்ற வளங்களைக் கொண்டு. அனைததையும் சமாளிக்கும் திறமை சிறுபான்மை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு தேவையான ஒன்றாக காணப்படுகிறது. இவற்றை உணர்ந்துள்ள அரசாங்கம் தற்சமயம் இரட்டை சமாளிப்பு விடயங்களை முன்னெடுத்து வருகிறது.

ஜனாதிபதியின் மீது முழுமையாக சுமத்தப்பட்டுள்ள இந்த பாரங்கள் யாவற்றையும் அவர் தற்சமயம் பரவல்படுத்தும் நடவடிக்கைகளின் மூலம் இலகுபடுத்தி வருகிறார். முன்னர் மகாவலித்துறை விடயத்தில் விட்டுக் கொடுப்பை மேற்கொள்ளாத ஜனாதிபதி பின்னர் அதிலும் விட்டுக்கொடுப்புக்கு இணங்கியுள்ளார்.

இதன் காரணமாக ஜே.வி.பி எனப்படும் மக்கள் விடுதலை முன்னணியினருடன் இணங்கிச் சென்று தமது ஆட்சியை தக்க வைத்துக் கொள்ளும் அரசியல் திறமையையும் அவர் வெளிக்காட்டியுள்ளார். மாறுபட்ட கொள்கைகளை கொண்ட இரண்டு தரப்புக்கும் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவதன் மூலமே தமது அரசியல் நியாயங்களை வெல்ல ஜனாதிபதியினால் முடியும்.

இல்லையெனில் ஐக்கிய தேசிய கட்சி விரித்திருக்கும் 6 மாத காலப் பகுதி வலையில் புதிய அரசாங்கம் விழ வேண்டியிருக்கும். இவ்வாறான அரசியல் சூழ்நிலையில்தான் அரசாங்கம் முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் நகர்வுகளை கொண்டு, அந்தக் கட்சிக்கே சவால் விடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சமாதான முயற்சிகளை பொறுத்த மட்டில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியில் இருந்த போது அதற்கு பாரிய அழுத்தங்களை ஜனாதிபதியும், அவருடன் தற்சமயம் கூட்டாட்சியை கொண்டு செல்லும் மக்கள் விடுதலை முன்னணியும் ஏற்படுத்தி வந்தன. சமாதான முயற்சிகள் என்ற அடிப்படையில் அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நாட்டை பிரித்துக் கொடுக்கப் போகிறார் என்ற பிரசாரத்தை ஜனாதிபதியும், மக்கள் விடுதலை முன்னணியினரும் மேற்கொண்டனர். ஆனால் இன்று ரணில் விக்கிரம சிங்கவின் ஆட்சியில் முன்னெடுக்கப்பட்ட சமாதான நகர்வுகளை ஒத்த விதத்திலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தமது சமாதான நகர்வுகளை முன்நடத்தி செல்ல முனைந்து நிற்கிறது.

எந்த ஜனாதிபதி நோர்வேயின் முன்னெடுப்புகளை விமர்சித்தாரோ அந்த ஜனாதிபதியே இன்று நோர்வே தரப்பை சமாதானப்பேச்சுகளுக்கான ஏற்பாட்டாளராக செயற்படுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

மறுபுறத்தில் ரணில் விக்கிரம சிங்க முன்னெடுத்துச் சென்ற அயல் நாடான இந்தியாவை சமாளிக்கும் செயற்பாட்டையும் ஜனாதிபதி அதே பாணியில் வழிநடத்தி செல்கிறார். ரணிலின் அரசாங்கத்தை காட்டிலும் இன்றைய அரசாங்கத்தில் வெளிவிவகார அமைச்சராக விளங்கும் லஷ்க்மன் கதிர்காமருக்கு சமாதான முன்நகர்வில் அதிக வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணான்டோவை பொறுத்த வரையில் அவர் என்று தமது பதவியை ஏற்றுக் கொண்டாரோ அன்று முதல் ஐக்கிய நாடுகள் சபையின் செயலர் பதவியிலேயே குறியாக செயற்பட்டார். எனவேதான் அவரை அதிகள வில் பயன்படுத்தாத ரணில் விக்கிரம சிங்க அதற்கு பதிலாக அரசியலமைப்பை நன்குணர்ந்த ஜி.எல் பீரிஸ் மற்றும் அமெரிக்காவின் நண்பரான மிலிந்த மொரகொட ஆகியோரைக் கொண்டு சமாதான முயற்சிகளை நகர்த்தி வந்தார்.

போர்நிறுத்த உடன்பாட்டை பொறுத்தமட்டில் ரணிலின் அரசாங்கம், அது பாதியில் முறிந்து விடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக செயற்பட்டது. அதன் மூலம் வெளிநாட்டு நிதிகளைக் கவர்ந்து நாட்டை அபிவிருத்தி செய்யலாம் என அது நம்பியது. எனினும் நாட்டில் ஏற்பட்ட, எதிர்க்கட்சிகளால் ஏற்படுத்தப்பட்ட அழுத்தங்களும், போராட்டங்களும் ரணிலின் அரசாங்கத்தை நிலை குலையச் செய்தன. அதையும் அவரால் சமாளித்திருக்க முடியும். ஆனால, அன்றைய அரசாங்கத்தில் அனைத்து விடயங்களையும் ரணில் விக்கிரசிங்கவே கவனிக்க வேண்டியிருந்தது. அவருடைய அரசாங்கத்தின் ஏனைய அமைச்சர்கள் சமாதானம் தவிர்ந்த மாற்று விடயங்களை கையாளக் கூடிய வல்லமையை பெற்றிருக்கவில்லை. அதேநேரம் ரணில் விக்கிரமசிங்கவும் தமது அமைச்சர்களிடம் முழுப்பொறுப்பையும் ஒப்படைத்து விட்டு திருப்திப்படும் கொளகையையும் கொண்டிருக்கவில்லை.

எனவே சாதாரண வேலை நிறுத்தங்கள் கூட உரிய அமைச்சுகளால் தீர்க்கப்படாமல் இறுதியாக அன்றைய பிரதம மந்திரியின் முடிவை எதிர்பார்த்தே பாரப்படுத்தப்பட்டன. இவைபோன்ற காரணங்கள் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் நிர்வாகத்திறமையை ஒட்டுமொத்தமாக இழக்கச் செய்தன. எனவேதான் 2001 ஆம் ஆண்டில் பெற்ற மக்கள் ஆணையை ஐக்கிய தேசிய முன்னணியினால் 2004 ஆம் ஆண்டில் பெறமுடியவில்லை.

இந்த அனுபவங்களை பயன்படுத்திக் கொண்ட நிலையிலேயே ஜனாதிபதியும் மக்கள் விடுதலை முன்னணியினரும் தற்சமயம தமது முயற்சிகளை முன் வைக்கின்றனர். இதில் ஒரு கட்டமே முன்னர் ச .தான முன்னெடுப்புகளையும், போர் நிறுத்த உடன்பாட்டையும் விமர்சித்து வந்த மக்கள் விடுதலை முன்னணி தற்சமயம் மென்மைப் போக்கை கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளது.


ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசிய முன்னணியின சவாலை முறியடிக்க வேண்டுமானால் குறைந்தது இரண்டு வருடங்களாவது ஆட்சியை நடத்திச்செல்ல வேண்டும். அவ்வாறான ஆட்சி ஒன்றை நடத்தி செல்ல வேண்டுமானால், அன்றைய ஆட்சியில் நிலவிய இயல்பு சூழ்நிலையை பாதிக்காத வகையில் செயற்படுவது அவசியமாகும்.

அத்துடன் முன்னைய அரசாங்கம் இயல்பு வாழ்க்கையை காட்டி நாட்டின் தொழிற்துறைகளில் ஏற்படுத்திய பதற்றநிலையை தவிர்க்க வேண்டும். மறுபுறத்தில் சமாதான முயற்சிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளை பகைத்துக் கொள்ள முடியாது என்பதன் காரணமாக அவர்கள் இதுவரையில் திருப்தி கண்ட சமாதான முனைப்புகளை பாதிக்கும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது. போன்ற நடவடிக்கைகளில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கரிசனையை காட்டி வருகிறது.

எனவே நோர்வே தரப்பை மீண்டும் சமாதான முயற்சிகளில் உதவும் செயற்பாட்டிற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் அழைத்துள்ளது. மறுபுறத்தில் நாட்டின் அன்றாட பிரச்சினைகளில் அதிக நாட்டம் காட்டும் செயற்திறனையும் அந்த அரசாங்கம் மேற்கொள்கிறது. இதன் ஒரு அம்சமாகவே நாட்டின் வேலையற்ற, குறிப்பாக பட்டதாரிகளை கவரும் முயற்சியை அது முன் வைத்துள்ளது.

இலங்கையில் இன்று வேலையற்ற பட்டதாரிகளின் பட்டியலில் சுமார் 27ஆயிரம் பேர் அடங்கியுள்ளனர். இவர்களுக்கு வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதன் மூலம் நீண்ட காலப்பிரச்சினை ஒன்றை தீர்க்கும் அதேநேரம் தமது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் செயலையும் அது செய்து முடிக்க திட்டமிட்டுள்ளது.

**பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் போது அதன் மூலம் அரசாங்கத்திற்கான நற்பெயரை அவர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும், அத்துடன் தமது வாக்காளர் பட்டியலிலும் புதிய பலரைச் சேர்த்துக் கொள்ள முடியும் என்பதுவும், பட்டதாரிகளே பாரிய போராட்டங்களுக்கு காரணமாக இருப்பதால் அவர்களை கட்டுப்படுத்தி வைக்கும் பொறியாகவும் இந்தத்திட்டம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணிக்கு உதவக் கூடும். இதற்கும் இந்த அரசாங்கம் ஐக்கிய தேசிய முன்னணி, இளைஞர் ஊக்குவிப்புத் திட்டத்திற்காக ஒதுக்கிய ஒரு பில்லியன் ரூபாவையே பயன்படுத்தவுள்ளது. இது முன்னைய அரசாங்கத்தின் திட்டத்தைக் கொண்டு தமது செல்வாக்கை இரட்டிப்பாக்கிக் கொள்ளும் நடவடிக்கையாகும்.**



பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் போது அதன் மூலம் அரசாங்கத்திற்கான நற்பெயரை அவர்களிடம் பெற்றுக் கொள்ள முடியும், அத்துடன் தமது வாக்காளர் பட்டியலிலும் புதிய பலரைச் சேர்த்துக் கொள்ள முடியும் என்பதுவும், பட்டதாரிகளே பாரிய போராட்டங்களுக்கு காரணமாக இருப்பதால் அவர்களை கட்டுப்படுத்தி வைக்கும் பொறியாகவும் இந்தத் திட்டம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு உதவக் கூடும். இதற்கும் இந்த அரசாங்கம் ஐக்கிய தேசிய முன்னணி, இளைஞர் ஊக்குவிப்புத் திட்டத்திற்காக ஒதுக்கிய ஒரு பில்லியன் ரூபாவையே பயன்படுத்தவுள்ளது.

இது முன்னைய அரசாங்கத்தின் திட்டத்தைக் கொண்டு தமது செல்வாக்கை இரட்டிப்பாக்கிக் கொள்ளும் நடவடிக்கையாகும். இரண்டாவது அவசரப் பிரச்சனையாக புதிய அரசாங்கம் விவசாயிகளை திருப்திபடுத்தும் திட்டம் ஒன்றை செயற்படுத்தியுள்ளது.

பசளைகளுக்கான விலையைக் குறைத்தமையே இந்தத் திட்டமாகும். இதன் மூலம் அன்றைய ஐக்கிய தேசிய அரசாங்கத்தின் மீது விவசாய மக்களுக்கு இருந்த வெறுப்பை இன்றைய அரசாங்கம் நீண்ட காலத்திற்கு அதிகரிக்கும் நோக்கை இலகுவாக செய்து முடிக்க நினைக்கிறது. அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு அப்பால் சமாதான முனைப்பை அரசாங்கம் முன்னெடுக்கும் போது பாரிய சிக்கல் நிலையை எதிர்நோக்குவதை தடுக்க முடியாது.

என்றாலும் மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் அடிப்படையில் அதனையும் செய்து முடிக்கலாம் என ஜனாதிபதி நம்பிக்கை கொண்டிருக்கிறார். இதன் கீழ் மக்கள் விடுதலை முன்னணியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மக்களுக்கு வெளிக்காட்டாத வகையில் இணங்கிச்செல்வதற்கு உடன்பட்டுள்ள நிலையை காணமுடிகிறது. இது ஐக்கிய தேசிய முன்னணி காலக்கெடு விதித்துள்ள 6 மாத ஆட்சியை நீடித்துக் கொள்ளும் ஒரு முயற்சியாகவே கருதப்படுகிறது.

இந்த உடன்பாட்டின் கீழ் ஜனாதிபதி சமாதான நடவடிக் கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வார். இதில் அரசாங்கத்தின் பங்காளியான மக்கள் விடுதலை முன்னணி தலையிடாப் போக்கையே கடைபிடிக்கும், பொதுமக்கள் அதுவும் பெரும்பான்மை சிங்கள மக்கள் ஏற்றுக் கொண்டால் வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாக யோசனையைக் கூட மக்கள் விடுதலை முன்னணியினர் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நிலையே தற்சமயம் பின்பற்றப்படுகிறது.

இதற்கான காரணமாக இன்று சிங்கள மக்களை பொறுத்த மட்டில் ரணிலை விட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி. நாட்டை பாதிக்காத தீர்வை முன்வைக்கும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது ஜே.வி.பியினர் ஜனாதிபதியுடன் இருப்பதாலேயே இவ்வாறான நம்பிக்கை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது, எனவே அதனை ஆரம்பத்திலேயே தகர்த்து நாட்டை யுத்தத்திற்கு மீண்டும் கொண்டு செல்லும் அவப்பேறு தமக்கு வந்து விடக்கூடாது என்பதில் புதிய அரசாங்கம் உறுதியாகவுள்ளது.

இந்த நிலையில் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் தமிழீழ விடுதலைப்புலிகள் கோரியதைப் போன்று உடனடியாக இடைக்கால நிர்வாகத்தை மையமாக வைத்து செயற்படுத்தப்படப் போகிறதா? அல்லது மீண்டும் பழைய பாணியிலேயே வடக்கு கிழக்கு பிரச்சினையை காரணம் காட்டி அரசியல் மற்றும் பிராந்திய காய் நகர்தல்கள் இடம் பெறப்போகிறதா? என்பதை பொறுத்தே இலங்கையின் எதிர்காலம் தங்கியுள்ளது. இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியை 6 மாதக் காலத்தில் கவிழ்க்கும் திட்டத்தை ஐக்கிய தேசிய முன்னணி நடைமுறைப் படுத்தியுள்ளது.

இதன் அடிப்படையில் ஏற்கனவே சபாநாயகர் பதவியை அடைந்துள்ள அந்த கட்சி சபை முதல்வர் பதவியிலும் கவனம் செலுத்துகிறது. அதாவது நாடாளுமன்றத்தை தமது கட்டுப்பாட் டின் கீழ் வைத்திருப்பதன் மூலம் சிறுபான்மை அரசாங்கத்தை அது முடக்கிவிட எண்ணம் கொண்டுள்ளது எனவே புதிய சிறுபான்மை அரசாங்கத்திற்கு ஆபத்து காத்திருக்கிறது.

## பயனாளிகளுக்கு உழவு இயந்திரங்கள்

(வடமராட்சி)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விவசாய பகுதியினரால் கடன் திட்டத்தின் கீழ் ஆறு பயனாளிகளுக்கு உழவு இயந்திரங்கள் வழங்கப் பட்டன.

சி.இலங்கேஸ்வரன் (கோரக்கட்டு) கோ.தவராசா (இராமநாதபுரம்), கு.கணேசலிங்கம் (இராமநாதபுரம்), இ.ஜெயரத்தினம் (தருமபுரம்), ஆ.நவரட்ணம்-(கல்மடுநகர்), ஆ.முருகையா (தருமபுரம்). ஆகியோரே ஆறு பயனாளிகளுமாவார். (17)

## பேரயா தின நிகழ்வுகள்

ஈஸ்வரம்மா தினவிழாவும், வெசாக் போயாதினமும் செவ்வாய்க்கிழமை காலை 5 மணி முதல் யாழ்- பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

அத்துடன், கலைநிகழ்வுகள், பரிசில் வழங்கல் என்பனவும் இடம் பெறும், பரிசில்களை சாயிநிறுவனங்களின் கௌரவ ஆலோசகர் செ.சிவஞானம் வழங்குவார். (111)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா*
*மன்னவன் கோல்கீழ்ப் படின்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## கந்தப்பொல வன்செயல்களும் கடந்தகாலப் பட்டறிவும்.

நுவரெலியாவில் கந்தப்பொல என்ற இடத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ந்துவரும் பதற்றநிலை தணிந்துவருவதாகக் கூறப்படுகின்றபோதிலும் அங்கு வாழும் தமிழ்மக்கள் மத்தியில் இன்னமும் அச்சமும், பீதியும் தொடர்ந்த வண்ணமே உள்ளதாக அங்கிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொலிஸாரும், ஆயுதப்படையினரும் பாதுகாப்பை தீவிரப்படுத்துதல் என்ற அடிப்படையில் அங்கு குவிக்கப்பட்டுள்ள போதிலும், ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து அமுலில் இருக்கும் அளவுக்கு அவர்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாக நிலைமை தொடர்கின்றது என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ளமுடிகிறது.

வெறுமனே கோஷ்டிமோதலாக உருவெடுத்ததாகக் கூறப்படும் இந்த அனர்த்தங்களின் மூலம் தமிழ் சிங்கள இனத்தவர்களிடையேயான வன்முறைக் களமாக விஸ்தாரங்கொள்வதற்கு காரணம் என்ன என்பது நுணுக்கமாக ஆராயப்படவேண்டிய விடயமாகும்.

இரு கோஷ்டிகளுக்கிடையேயான சிறுமோதலை உடனடியாகவே விரைந்துசென்று கட்டுப்படுத்த இயலாத கையாலாகாத் தன்மையை அந்தப்பகுதி பொலிஸ்காரர்கள் கொண்டிருந்தார்களா? அல்லது இந்த மோதலை ஏதோ ஒரு காரணத்தின் பேரிலோ, புற அழுத்தங்களின் நிர்ப்பந்தங்களின் அடிப்படையிலோ அது ஒரு இனமுரண்பாடாக உருவாகும்வரை பாாத்திருந்தும், நிலைமை கட்டுமீறி அது ஒரு வன்முறைக்களமாக உருவானதும், ஏனைய இனக்கலவர கால நடைமுறைகளைப் போன்று பக்கச்சார்பு நடவடிக்கையொன்றை மேற்கொண்டு, துப்பாக்கிப் பிரயோகம் செய்து இரு அப்பாவித்தமிழரைக் கொன்று பிரச்சினையை மேலும் ரணகளமாக்க விரும்பினார்களா என்ற கேள்விகள் மக்களிடையே எழுவதை கவனத்தில் கொண்டு நிலைமையின் ஆழமூலங்களை அறிவது அவசியமாகின்றது.

அது என்னவோ பெரும்பான்மை இனத்தவர்களுக்கும், சிறுபான்மை இனத்தவர்களிற்குமிடையே ஏதோ ஒரு காரணத்திற்காக ஒரு முறுகல்நிலை உருவாகும் போதெல்லாம் பொலிஸாரதும், பாதுகாப்புப்படையினரதும் ஆயுதங்கள் சிறுபான்மையினரை நோக்கித் திருப்பப்பட்டு இலக்கு வைக்கப்படுவது இலங்கையின் ஒரு பேரினவாத கலாசார மரபின் அங்கமாகிவிட்டது.

அவர்களது ஆயுதங்கள் ஒருபோதும் பாதிக்கப்பட்ட சிறுபான்மையின மக்களின் பாதுகாப்புக்காக செயற்படுவதுமில்லை, நீதியின் பக்கம் நின்று இயங்குவதும் கிடையாது என்பதை சுதந்திர இலங்கையின் ஐம்பத்தாறு ஆண்டுகால இரத்தக்கறை படிந்த வரலாற்றின் ஒவ்வொரு பக்கமும், மிக ஆழமாக பதிவுசெய்தேயுள்ளது.

கந்தப்பொலவில் தமிழ் மக்களுக்கு எதிராக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த காடையர்களால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளின் அவலப் பதிவுகளையும் வரலாறு பதிந்து கொள்ளவேசெய்யும்.

ஆனால் அவர்கள் பக்கமுள்ள நீதியையும், நியாயத்தையும் எந்த இலங்கை அரசும் அதிகாரவர்க்கமும் அவர்களுக்கு வக்காலத்து வாங்கி நிற்கும் சில வெளிச்சக்திகளும் வழங்கப்போவதுகிடையாது.

தமிழ் மக்கள் பேரினவாதக் குண்டர்களால் கொல்லப்படுவதும், காயப்படுத்தப்படுவதும் அவர்களது வீடுகள், கடைகள் எரிக்கப்பட்டு உடமைகள் சூறையாடப்படுவதும், 1958 ஆம் ஆண்டுமுதல் அதாவது பண்டாரநாயக்க காலம் முதல் இன்று சந்திரிகா காலம் வரைக்கும் அரச கட்டுப்பாட்டிலுள்ள அவர்களின் பாதுகாப்பு படையினரின் பின்புல ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் வழமையாகவே கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்க உண்மையேயாகும்.

கந்தப்பொலவில் நிகழ்வுகளும் அதற்கு எந்த வகையிலும் விதிவிலக்கல்ல என்பதும் தெளிவாகியுள்ளது.

தமிழினம் ஒருமைப்பட்டு ஒரு எழுச்சிக்கோலம் கொளளும் போதெல்லாம், பேரினவாத சக்திகள் எரிச்சலும், பொறாமையும் கொண்டு இவ்வாறான இனக்கலவரங்களுக்கான விஷவித்துக்களை விதைக்க முயல்வது வழக்கமான ஒன்றேயாகும்.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் எழுச்சி இந்தத் தேர்தலில் மற்றொரு வரலாற்று திருப்பத்தையும் உள்ளடக்கியதாக - அதாவது மலையக தமிழ் மக்களின் உறுப்பினர்களின் ஆதரவையும் ஒன்றிணைத்த சக்தியாக உருவாகிவருவதும் பேரினவாதிகளால் பொறுத்துக் கொள்ளமுடியாத ஒன்றேயாகும்.

கந்தப்பொல வன்செயல்களில் இந்த பொறாமையின் எரிச்சலும் கொழுந்தவிட்டெரிந்திருக்கலாம்.

பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படையினரின் தமிழ் மக்களுக்கு எதிரான ஆயுதப்பிரயோகங்களின் பின்னணியில் இனக்கலவரங்களைத் தூண்டி அரசியல் ஆதாயம்பெறும் அரசாங்கச் சக்திகளின் வலுவான கரங்கள் இருப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் கூறுவதை நிராகரித்துவிடமுடியாது.


இவற்றையெல்லாம் அரசு விசாரிப்பதாகக் கூறி பரபரப்பாக அறிக்கைகளை விடலாம். ஆனால் அவற்றால் பாதிக்கப்பட்டோருக்கு நியாயமோ, நீதியோ கிடைக்கப்போவது கிடையாது.

ஏனென்றால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள்...

பேரினவாத சக்திகளின் அநுசரணையுடனும், ஆசீர்வாதத்துடனும் அவர்களின் அபிலாஷைகளை காப்பாற்றுவதென்று அமைக்கப்பட்ட அரசுகளின் சிறுபான்மை நீதியை எதிர்பார்ப்பது வீணான விடயமே...

கடந்தகால பட்டறிவு இதனைத்தான் தமிழ்மக்களுக்கு இறுக்கமாக உணர்த்தி நிற்கிறது.

# நாடும் நடப்பும்



தமிழ்த் தொழிலாள விவசாய வர்க்கம் தமது தேச விடுதலையை வென்றெடுப்பதன் மூலம் சகல அடக்குமுறை - ஒடுக்குமுறைகளில் இருந்தும் விடுதலை பெறமுடியும்.
-மேதின நாள் செய்தி-

# கருணா குழுவின் ஆயுத விற்பனையைத் தடுக்கவே தெஹிவளைப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையாம்!

## பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து கொழும்பு உட்பட நாட்டின் பல இடங்களில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது குறித்து தமிழ் மக்கள் பதற்றமடையத் தேவையில்லை. நாட்டின் பாதுகாப்புக் கருதியே படையினர் இந்தத் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

இதேவேளை - கடந்த வியாழன் இரவு தெஹிவளை பொலிஸ் பிரிவில், பொலிஸ் சோதனைத் தடைகள் போடப்பட்டு, பாரிய தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தமிழர்கள் பலர் கைதுசெய்யப்பட்டமை குறித்து தெஹிவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சேனநாயக்க கருத்துத் தெரிவிக்கையில் -

கருணா அணியினருக்கும் பாதாள உலகக் கோஷ்டியினருக்கும் இடையே ஆயுதவிற்பனை நடைபெறுவதாகக் கிடைத்த தகவலையடுத்தே இந்தப் பாரிய தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதுகுறித்து பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை.

தேடுதலின்போது கைதுசெய்யப்பட்டோர் அனைவரும் விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாகத் தெரிவித்த அவர், ஆயுத விற்பனை தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை என்றும், தேடுதல் நடவடிக்கை தொடரும் எனவும் தெரிவித்தார்.

கருணா விவகாரம் தற்போது தமிழ்மக்கள் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்தியுள்ளது. கருணா அணியினர் தொடர்ந்து ஆயுதங்களோடு நடமாடி பாதாள உலகக் கோஷ்டியினருக்கு ஆயுதங்களை விற்பனை செய்து வருகின்றனர்.

சட்டவிரோத கும்பல்களிடம் ஆயுதங்கள் சிக்குவதன் காரணமாக நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்படலாம். எனவே இவ்வாறான நடவடிக்கைகளை ஒடுக்குவதே தேடுதல் நடவடிக்கையின் பிரதான நோக்கமாகும்.

தெஹிவளைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் சந்தேகத்திற்கிடமான 14 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் ஒருவர் தனது இரண்டு வயதுக் குழந்தையுடன் பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்திருந்தார். குழந்தையை தனிமையில் விடமுடியாத காரணத்தாலேயே தன்னுடன் அழைத்து வந்துள்ளார். விசாரணையின் பின்னர் 14 பேரும் விடுதலை செய்யப்பட்டனர் என்று தெரிவித்தார்.

# அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்ற மூவருக்கு தண்டப்பணம் அறவீடு!

## யாழ்.மாவட்ட நீதிவான் விக்னராஜா உத்தரவு

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரம் இன்றி அரசாங்க சாராயத்தை காசுக்கு விற்பனை செய்த மூன்று பேரிடம் தலா மூவாயிரம் ரூபா அறவிடப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அனுமதிப்பத்திரம் இன்றி அரசாங்க சாராயத்தை காசுக்கு விற்பனை செய்த நான்கு பேரையும் யாழ். சிறு குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்து, கடந்த 28 ஆம் திகதி யாழ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

நால்வரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, ஒவ்வொருவரும் தலா 3 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்த வேண்டுமென யாழ்.மாவட்ட நீதிவான் ரி.விக்னராஜா உத்தரவிட்டார். இந்த தண்டப்பணம் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்திற்கு வழங்கப்படவுள்ளது.

# யாழ்.குடாநாட்டில் இன்றும் இடியுடன்கூடிய மழை பெய்யும்

## வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இன்றும் இடியுடன்கூடிய மழை ஆங்காங்கே பெய்யக்கூடும் என யாழ்.மாவட்ட வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மழை பெய்யக்கூடிய முகிலோட்டங்கள் உருவாகுவதனால் இன்று யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளில் மப்பும் மந்தாரமுமான நிலை தோன்றும். சில இடங்களில் இடியுடன்கூடிய மழை ஆங்காங்கே பெய்யக்கூடும்.

இந்த மப்பு மந்தாரமான நிலை ஒரு சில தினங்கள்வரை நீடிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் நண்பகல், மாலைவேளைகளில் வெயில் எறிக்கக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்தது.

## குடாநாட்டிலுள்ள நிரந்தரப் படைப்பிரிவிலிருந்து

# கலாற்படை பயிற்சியைநெறியை நிறைவுசெய்த 86 பேருக்கு நேற்று சான்றிதழ் வழங்கப்பட்டது

(பலாலி)

யாழ். குடாநாட்டில் நிலைகொண்டுள்ள நிரந்தரப் படைப்பிரிவிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட இராணுவத்தினர், விசேட காலாட்படை பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளனர்.

இந்தப் பயிற்சித் திட்டத்தின் கீழ் 5 ஆவது கட்டமாக ஆரம்பிக்கப்பட்ட பயிற்சியில் அதிகாரிகள் தரத்தைச் சேர்ந்த ஆறு பேரும், சாதாரண சிப்பாய்கள் 86 பேருமே இந்தப் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளனர்.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் வசாவிளான் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மைதானத்தில் - யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால தலைமையில் இடம்பெற்றது.

இந்தப் பயிற்சி நெறியில் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள முத்லாவது சிங்க றெஜிமென்ட் 6,7,8 - சிங்கறெஜிமென்ட் 9,10,14 - முதலாவது கெமுனு படைப்பிரிவு மற்றும் 4,6,8 கெமுனு படைப்பிரிவினர் - 1,5,7 விஜேபாகு படைப்பிரிவு - 6 ஆவது கஜபாகு படைப்பிரிவு ஆகிய படைப்பிரிவிலிருந்து தலா 6 பேர் வீதம் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கு 04 ஆவது சமிக்ஞை பிரிவு, 6 பொறியியல் பிரிவு, பலாலி ஆதாரவைத்தியசாலை, பலாலி விமானப்படை போன்றவற்றில் பயிற்சி வழங்கப்பட்டு, பின்பு மின்னேரியாவில் உள்ள குறிபார்த்துச் சுடும் பாடசாலை, தியத்தலாவ, மாதுறுஓயா விசேட படைமுகாம் மற்றும் ஊவா மாகாணத்திலுள்ள குடாஓயா போன்ற பயிற்சி முகாம்களில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளன.

2003 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பயிற்சிநெறி - 2004 ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி முடிவடைந்தன.

இந்தப் பயிற்சிகளை சிறந்த முறையில் பெற்றவர்களுக்கு விசேட சான்றிதழ்களை யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால நேற்றுமுன்தினம் வழங்கினார்.

# கல்வி பொதுத் தராதரப் பத்திர (உ/த) 2004 ஏப்ரல்

## அளவையியலும் விஞ்ஞான முறையும் மாதிரி வினாத்தாள்

### பகுதி I

**I.**

அ) எடுப்பு முரண்பாட்டை அடிப்படையாகக்கொண்டு பின்வருவன வலிதானதா வலிதற்றதா எனபதைத் துணிக.

(1) சில கடற்கன்னிகள் காதலிப்பவை என்பது உண்மை எனின், அதன் மறுதலையின் எதிர்மறை பொய் அல்ல

(2) எல்லா கடற்கன்னிகளும் காதலிப்பவை எனின் காதலிப்பவை சில கடற்கன்னிகள் அல்ல.

(3) எந்த ஒரு கடற்கன்னிகளும் காதலிப்பவை அல்ல என்பது உறுதி எனின் சில கடற்கன்னிகள் காதலிப்பவை [illegible] என்பது உறுதி அல்ல.

(4) ஒவ்வொரு கடற்கன்னிகளும் காதலிப்பவை எனின் கடற்கன்னிகள் காதலிப்பவை அல்ல என்பது பொய்

(5) பெரும்பாலான கடற்கன்னிகள் காதலிப்பவை அல்ல என்பது பொய் எனின் ஏராளமான கடற்கன்னிகள் காதலிப்பவை ஆகும்.

ஆ) தற்கால விளக்கமாகிலும் சரி பாரம்பரிய விளக்கமாகினும் சரி எதிர்மறை வலிதானதாக அமையும் உதாரணத்துடன் விளக்குக?

இ) எடுப்பு முரண்பாட்டு அனுமானத்தில் காணப்படும் நிறை குறை பிரச்சினைகளை உதாரணத்துடன் தெளிவுபடுத்துக?

ஈ) வழிப்படுத்தி என்பதன் மூலம் கருதுவது யாது?

**II.**

அ) பாரம்பரிய வழிப்பெறுகை அனுமானத்திற்கு அது பற்றிய தற்கால விளக்கத்திற்கும் இடையிலான வேறுபாடு என்ன? உதாரணத்துடன் தருக?

ஆ) I எடுப்புக்கு எதிர்மாறாக ஏன் A எடுப்பைப் பெறமுடியாது என்பதை உதாரணம் மூலம் விளக்குக?

இ) பின்வரும் வழிப்பெறுகை அனுமானம் சரியானதா? தவறானதா எனக் காட்டுக?

1. I எடுப்பிற்கான நேர்மாற்றமாக O எடுப்பைப் பெறுவதில்லை.
2. எல்லா சிங்களவரும் தமிழர்கள் எனின் தமிழர்கள் சிங்களவர் ஆவர் என்பது எதிர் மாற்றமாகும்
3. எல்லா திமிங்கலமும் பாலூட்டிகள் எனின் பாலூட்டிகள் அல்லாதன திமிங்கலம் அல்ல என்பது வலிதான எதிர் வைப்பு அல்ல

ஈ) E எடுப்புக்கான மறுமாற்ற நேர்மாற்றத்திற்கு உதாரணம் தருக?

உ) வழிப்பெறுகை என்றால் என்ன என விளக்குக?

**III.**

அ) உரு III இல் அமைந்த எல்லா பிரகாரமும் நவீன விளக்க முறையில் வலிதாக அமைவதில்லை விளக்குக?

ஆ) பேர் எடுகூற்று குறை சிறுபதம் மறை ஆக அமையும் இடத்து எவ்வித வலிதான முடிவும் பெறமுடியாது விளக்குக?

இ) பின்வரும் நியாயத்தொடையினை பெரும்பதம் சிறுபதம் மத்தியபதம் எனக் குறிப்பிட்டு நியாயத் தொடையின் பிரதான விதிகள் மூலம் அவற்றின் வலிதினை துணிக?

1. அரசியல்வாதிகள் எல்லோரும் ஏமாற்றுக்காரர் ஆனால் இலட்சியவாதிகள் அல்ல எனின் இலட்சியவாதிகள் ஏமாற்றுக்காரர் அல்ல
2. நாடாளுமன்ற உறுப்பினர் எல்லோரும் அதிகம் உழைப்பவர் அல்ல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் அதிகம் உழைப்பவர் எனவே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆவர்
3. முஸ்லிம்களும் தமிழர்களும் சிங்களவரைப்போல் ஒற்றுமையானவர் அல்ல எனவே சிங்களவர் முஸ்லிம்களும் தமிழர்களும் அல்ல

**IV.**

அ) பின்வரும் எடுப்புக்களை சுருக்க திட்டத்தின் அடிப்படையில் குறியீடு செய்து எடுகூற்றுக்களுக்கு வென் வரைபடத்தினை வரைந்து வலிதானதாயின் முடிவை பெறுக வலிதற்றதாயின் முடிவை பெறமுடியாது எனக் கூறுக?

1. எல்லா தீவிரவாதிகளும் அமைதியானவர் அல்ல
   சில தமிழர்கள் அமைதியானவர் அல்ல
2. எந்த நாய்களும் நன்றியுடையவை அல்ல
   சில நரிகள் நாய்கள் ஆகும்
3. சில புத்திசாலிகள் ஆசிரியர்கள் ஆவர்
   எல்லா ஆசிரியர்களும் செல்வந்தர் ஆவர்

ஆ) பின்வரும் எடுப்புக்களை வகுப்பு அடிப்படையில் குறியிடு அமைத்து அவை வலிதானதா வலிதற்றதா என்பதனை வென் வரைபடத்தின் மூலம் துணிக?

1. எல்லா குரங்குகளும் அமைதியானவையும் ஆத்திரமுடையவையும் ஆகும் சில குரங்குகள் ஆத்திரமுடையன ஆகும் எனவே அமைதியானவை சில ஆத்திரமுடையவை ஆகும்
2. முரளியும் வோர்னும் சுழல்பந்து வீச்சாளர்கள் முரளி அதிக விக்கற்றுக்களை கைப்பற்றியுள்ளார் எனவே வோர்ன் சுழல்பந்து வீச்சாளர் என்பதுடன் அதிக விக்கற்றுக்கள் கைப்பற்றியுள்ளார்

இ) எல்லா ஆசிரியர்களும் இதயமுள்ளவர்கள் ஆவர் சில பெண் ஆசிரியர்கள் இதயமுள்ளவர் அல்ல என்பதற்கு வென்வரைபடத்தினை வரைந்து கீழ்வரும் முடிவுகள் வலிதானதா வலிதற்றதா என சோதிக்குக?

1. சில பெண் ஆசிரியர்கள் இல்லை
2. சில ஆசிரியர் பெண் ஆசிரியர் அல்ல
3. சில ஆசிரியர்கள் இருக்கிறார்கள்

ஈ) ஒயிலரின் வரைபடமும் குறைபாடும் பற்றி விளக்குக?

### பகுதி II

**V.**

அ) ஒன்றில் அவன் இலட்சியவாதி அல்ல அல்லது அவன் போராட்டவீரன் அல்ல என்பதற்கு முரணான ஒரு குறியீட்டை உண்மை அட்டவணையின் பிரகாரம் காட்டுக?

ஆ) காதல், அன்பு இரண்டில் ஒன்று மட்டுமே இன்பமானது எனின் பெண்கள் இனிமையானவர் எனும் வாக்கியத்திற்கு சமனான இருகுறியீட்டினைத் தருக?

இ) எடுகூற்று உண்மையாகவும் முடிவு கூற்று பொய்யாகவும் அமையும் வலிதான வாதம் ஒன்று தருக?

ஈ) நேரல் முறையில் காணப்படும் மாறி முரண் மாறிலி முரண் என்பதை உதாரணம் மூலம் விளக்குக?

உ) $[(P \wedge \sim Q) \rightarrow (\sim R \vee \sim S)]$ எனும் வாக்கியம் ஆனது எப்போது பொய்யாகும் எனக் கூறுக?

ஊ) குறியீட்டு மொழி என்றால் என்ன என விளக்குக?

எ) பின்வரும் சமன்பாடுகள் சமனானதா முரணானதா அல்லது சமனும் அல்ல முரணும் அல்ல என்பதனை உண்மை அட்டவணை நேர்முறைமூலம் துணிக?

1. $[(\sim P \vee Q) \vee P]$, $[(P \wedge \sim Q) \leftrightarrow \sim P)]$
2. $[\sim (P \vee Q) \rightarrow \sim R]$, $[(\sim P \rightarrow \sim Q) \wedge \sim R]$

**VI.**

அ) பின்வரும் வாதங்களை சுருக்கத் திட்டத்தின் துணைகொண்டு குறியீடு செய்து அவை வலிதானதா வலிதற்றதா என்பதனை உண்மை அட்டவணை நேரல் முறைமூலம் துணிக?

1. கல்வியும் காதலும் இனிமையானவை ஆனால் அதில் ஒன்று இனிமையானது எனின் மற்றது இனிமையானது அல்ல ஆகவே கல்வி இனிமையானது அல்ல எனின் காதல் இனிமையானது அல்ல
2. அவன் சவூதி செல்வான் எனின் திருமணம் செய்வான். அவன் கனடா சென்றாலும் திருமணம் செய்வான். அவன் மேற்கூறிய இரு நாடுகளில் ஒன்றுக்கு மாத்திரமே சென்றுள்ளான் ஆகவே அவன் சவூதிக்கு அல்லது கனடாவுக்கு சென்றாயினும் திருமணம் செய்யவில்லை என்று கூறுதல் பொய்யாகும்.
3. பரீட்சை காதல் இரண்டில் ஒன்றில் மட்டும் தான் தவா சித்தியடைந்தான் எனின் அவன் பல்கலை கொழும்பு இரண்டில் ஒன்றுமட்டுமாவது செல்லாமல் இருக்க முடியாது பரீட்சையில் தவா சித்தி அடைந்தால் அவன் கொழும்பு செல்லவில்லை அல்லது காதலில் சித்தி அடையவில்லை.

ஆ) பின்வரும் வாக்கியங்களைச் சுருக்கத் திட்டத்தின் துணைகொண்டு குறியீடு செய்து அவற்றை நேரல் முறைமூலம் பிரச்சினையைத் தீர்க்கவும்.

1. A,B என்ற இரு அரசியல்வாதிகள் தமது கருத்நுக்களை பின்வருமாறு கூறினர்
   A, - இலங்கையில் சமாதானம் ஏற்பட்டால் தமிழர்கள் தங்களுக்குள் சண்டை பிடிப்பார்கள்.
   B, - இலங்கையில் சமாதானம் ஏற்படவும் இல்லை தமிழர்கள் தங்களுக்குள் சண்டை பிடிக்கவும் இல்லை
   இவ்விரு அரசியல்வாதியின் கருத்தும் சரியானது என நாம் ஏற்பதாயின் இலங்கையில் சமாதானம் ஏற்படுவது பற்றி கொள்ளக்கூடிய முடிவு என்ன?
2. இரு ஆசிரியர்கள் தமது போட்டிநிலை குறித்து பின்வருமாறு கருத்து தெரிவித்தனர்
   சுது - ரகுவுக்கு அதிக சம்பளம் கிடைக்குமாயின் ஜெகாவின் மனநிலை பாதிக்கும்.
   குமார் - ஒன்றில் ரகுவுக்கு அதிக சம்பளம் கிடைக்கவில்லை அல்லது குட்டிக்கு அதிக சம்பளம் கிடைக்கும்.
   இவ்விருவரின் கருத்துக்களும் உண்மை எனக் கொண்டால் நீர் என்ன முடிவுக்கு வருவீர்

**VII.** பின்வரும் வாக்கியங்களை சுருக்கத் திட்டத்தின் துணைகொண்டு குறியீடு செய்து அவை வலிதானதா அல்லவா என்பதை எடுகூற்றுக்களில் இருந்து முடிவை பெறுவதன் மூலம் காட்டுக?

1. குட்டி, புத்தா இருவரில் ஒருவர் மாத்திரம் அதிஸ்ரசாலி எனின் ரகுவும் பாலாவும் திறமைசாலிகள் ரகு திறமைசாலி அல்ல எனவே குட்டி, புத்தா இருவரும் அதிஸ்ரசாலி என்பதை ஏற்றுக்கொள்ளமுடியும்.
2. ரமேஸ் அடிதடியில் வெற்றிபெற்றால் ரெஜி வெற்றி பெறவில்லை என்பதுடன், ரெஜி வெற்றி பெற்றால் ரமேஸ் அடிதடியில் வெற்றி பெறவில்லை ரமேஸ், ரெஜி இருவரும் அடிதடியில் வெல்லவில்லை என்பதைத்தானது இது கூறுகிறது.
3. அந்த மிருகம் கொடுமையானது ஆயின் ஆயினே அது ஆத்திரமுடையது ஆகும். அந்த மிருகம் கொடுமையானது அல்ல அதிஸ்ரமானது ஆனால் இரண்டும் அல்ல ஆகவே அந்த மிருகம் ஆத்திரமுடையது எனின் அதிஸ்ரமானது அல்ல
4. நாகமும் புகைப்படக்கருவியும் படம் எடுக்கும் எனின் செய்மதி படம் எடுக்கும் எனின் செய்மதி படம் எடுக்கவில்லை ஆயின் ஒன்றில் நாகம் படம் எடுக்காது அல்லது புகைப்படக் கருவி படம் எடுக்காது

**VIII.**

அ) பின்வரும் தோற்றங்களை பெறுகை முறையை நிறுவிக் காட்டுக

1. $[(P \rightarrow \sim Q) \rightarrow R] \rightarrow [\sim (P \wedge Q) \rightarrow R]$
2. $[(P \rightarrow Q) \rightarrow R \wedge S)] \rightarrow [(R \rightarrow T) \rightarrow \sim (S \wedge T)] \rightarrow \sim Q$
3. $[(P \wedge Q) \vee (R \wedge S)] \rightarrow (\sim R \rightarrow P]$

ஆ) $[(P \wedge \sim Q) \rightarrow (\sim R \vee \sim S)]$ எனும் கூற்றை பொய்யெனக் கொண்டு பின்வரும் கூற்றுகள் உண்மையானதா பொய்யானதா அல்லது தீர்மானிக்க முடியாதா என்பதனை உண்மை அட்டவணை பயன்படுத்தாது காட்டுக.

1. $[(P \wedge \sim Q) \rightarrow \sim R$
2. $(\sim Q \vee Q) \leftrightarrow (\sim R \rightarrow S)$
3. $(P \wedge \sim Q) \rightarrow (R \vee \sim S)$
4. $[(\sim Q \wedge R) \rightarrow \sim S)]$

### பகுதி III

**IX.** பின்வரும் எவையேனும் ஐந்திற்கு சிறுகுறிப்பு தருக?

1. வாய்ப்பின்மையும் பொய்யும்
2. தற்சூத்திரமும் அல்லாதவையும்
3. போதிய காரண விதி
4. தோற்றத்தின் பயன்பாடுகள்
5. பரார்த்தனுமானும்
6. ஒழுக்கவியலில் இயற்கைப்போலி

**X.**

அ) பின்வரும் நியமப் போலிகளை இரண்டு உதாரணம் தந்து விளக்குக?

1. விகற்பபோலி 2. நபர்போலி 3. கவர்பொருட்போலி 4. சொல்லணிப்போலி

ஆ) பின்வரும் நியமமில் போலிகளை இனங்கண்டு விளக்குக?

1. தேர்தலில் வாக்குரிமை அளிக்கும் உரிமை 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் உண்டு. ஆகவே 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஒவ்வொருவரும் நான்கு வாக்குகள் போடமுடியும்.
2. மக்களே நீங்கள் அனைவரும் A கட்சிக்கே உங்கள் வாக்கை அளிப்பீர்கள் என்பதில் எமக்கு ஐயம் எதுவும் இல்லை ஏனெனில் மீண்டும் ஒரு போரை நீங்கள் விரும்பமாட்டீர்கள் தானே.
3. பெண்கள் ஆகிய நீங்கள் சங்கரதேவர் ஐயாவுக்கு வாக்களிக்க வேண்டாம் ஏனெனில் அவர் தமது வாழ்வில் எத்தனையோ பெண்களை ஏமாற்றியவர்.

**11.**

அ, இந்திய அளவையியலுக்கும் அரிஸ்ரோட்டில் அளவையியலுக்கும் இடையிலான வேறுபாடு என்ன?

ஆ) இந்திய அளவையியலின் பின்வரும் இரு பதங்களை உதாரணம் மூலம் விளக்குக?

1. ஹேத்துபாச 2. உபநிடதம் 3. சத்துஸ்கோடி

**12.**

அ) பழிக்குப்பழி வாங்குதல் தண்டனையின் நோக்காக கருத முடியாது விளக்குக?

ஆ) உண்மை பற்றிய பயன்நிலை கொள்கை யாது கூறுகிறது?

இ) பின்வரும் ஒழுக்கவியல் கருத்துக்களை விளக்குக?

1. தீர்ப்பும் சாட்சியமும் 2. ஆவணச் சான்றுகள் 3. சட்டமும் ஒழுக்கவியலும்

### பகுதி I

**1.**

அ) சோதிடம் எந்தளவுக்கு விஞ்ஞானம் எனக் கருதுகின்றீர் விளக்குக?

ஆ) பின்வரும் துறைகள் பிரயோக விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், நியமம்கூறும் விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் அல்லாதவை என்பவற்றுக்குள் வகைப்படுத்துக?

1. லேசர் கதிர் சிகிச்சைமுறை
2. உண்மை பற்றிய இசைவுக் கொள்கை
3. பிரபஞ்சம் அசைவு கொள்கை
4. தேவைக்கோட்பாடு
5. மறுபிறப்பு

இ) சிக்மன் புரொய்ட் உளப்பகுப்பு வாதத்தில் பொப்பரின் விளக்கம் என்ன தாக்கத்தை ஏற்படுத்துகிறது?

ஈ) பின்வரும் கூற்றுக்கள் விஞ்ஞானக் கூற்றுக்களா அல்லவா எனக் கூறுக?

1. ஒன்றில் பரீட்சை நடைபெறும் அல்லது பாடக்குறிப்பு முடிவடையும்
2. வரலாறு ஒரு கற்பனைக் கதை ஆகும்.

உ) தூய பிரயோக விஞ்ஞான தொடர்புகளை உதாரணம் மூலம் காட்டுக?

**2.**

அ) விஞ்ஞானத்தில் விதிகளாயினும் சரி கொள்கைகள் ஆயினும் சரி கருதுகோளை உறுதிப்படுத்துவனவாக அமைகிறது விள்க்குக?

ஆ) எந்த ஒரு கோட்பாடும் அமைக்கும்போது அதற்கு நேர்காணல் அடிப்படையாக அமைகிறது விளக்குக?

P.கமல் ஆசிரியர் யாழ்.இந்து மகளிர் கல்லூரி

### பலூஜா நகரில் நேற்றுமுன்தினம்

# அமெரிக்கப் படை வெளியேறிய இடங்களில் ஈராக் படையினர் பாதுகாப்புப் பணியில்!



பலூஜா நகரில் அமெரிக்கப் படைகள் வெளியேறிய பிரதேசங்களில் ஈராக்கிய படையினர் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர். இந்தப் பகுதியில் முதல் கட்டமாக 200 ஈராக்கியப் படையினர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். இப் படைப் பிரிவிற்கு முன்னாள் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனின் ஆதரவுப் படைப் பிரிவின் ஜெனரலான ஜசீம் மொகமட் சாலே தலைமை வகிக்கின்றார். பலூஜா நகரில் 1000 வரையான படையினர் கடமைபுரியவுள்ளனர்.

ஈராக்கிய படையினர் தடை முகாம்களிலும் சிக்கலான பிரதேசங்களிலும் எவ்வாறு வெற்றிகரமாக செயற்படுகின்றனர் என்பதை அமெரிக்கப் படையினர் அவதானித்து வருவார்கள் எனவும் அமெரிக்கப் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனிடையே பலூஜா நகரிலிருந்து வெள்ளிக்கிழமை அமெரிக்கப் படையினரின் வெளியேற்றத்தை பலூஜாவில் வாழும் மக்கள் உற்சாகமாகக் கொண்டாடினார்கள். வெள்ளிக்கிழமை அமெரிக்கப் படையினர் பலூஜாவிலிருந்து வெளியேறிக்கொண்டிருந்த வேளையிலும் - அமெரிக்கப் படைகளுக்கு எதிரான போர் தொடர்ந்த வண்ணமிருந்ததாக றொய்ட்டர் செய்திச் சேவை தெரிவித்தது.

பலூஜாவிற்கு வெளியே தெருவோர குண்டுத் தாக்குதலில் இரு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் இரண்டு கடற்படையினர் கொல்லப்பட்டும் அறுவர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல் அமெரிக்கப் படையினரின் தளத்திற்கு அருகில் வாகனக் குண்டுத் தாக்குதல் மூலம் நடத்தப்பட்டிருந்தது.



### பயங்கரவாத நடவடிக்கைக்கு

# சிரியா ஆதரவளிக்கின்றதாம்!

### குற்றம் சாட்டுகிறது அமெரிக்கா

சிரியா பயங்கரவாதத்திற்கு அனுசரணையாக உள்ளதெனவும் ஈராக்கிற்குள் ஊடுருவும் இஸ்லாமிய பயங்கரவாதிகளைத் தடுத்து நிறுத்தவில்லையெனவும், அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. மேற்படி குற்றத்தால் தாம் சிரியா மீதான பொருளாதாரத் தடையை நீக்கமுடியாது என அமெரிக்க அறிவித்துள்ளது.

அமெரிக்கா சிரியா மீதான பொருளாதாரத் தடையை மேலும் இறுக்கியுள்ளதென வெள்ளை மாளிகையின் பேச்சாளர் ஸ்கொட் மக் செலிலான் தெரிவித்தார். வெகு விரைவில் இன்னும் பல விடயங்கள் வெளியிடப்படும் எனவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் சிரியா மீது விதித்திருந்த கட்டுப்பாட்டில் அதிக அக்கறை காட்டவில்லையென அமெரிக்க காங்கிரஸ் அங்கத்தவர்கள் இருவர் தெரிவித்த கருத்தின் பின்னரேயே வெள்ளை மாளிகைப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



வெள்ளை மாளிகையின் பேச்சாளர் மேலும் தெரிவிக்கையில் எமது குறிக்கோள், சிரியா தனது நடைமுறையிலிருந்து மாறவேண்டும் என்பதாகும் எனவும் குறிப்பிட்டார்.

அமெரிக்காவுக்காக பேசும் அதிகாரி தமது கருத்தில் தெரிவிக்கையில், வெளிநாட்டுப் பயங்கரவாதிகள் சிரியாவை தமது தளமாகக் கொண்டு ஈராக்கில் ஊடுருவுகிறார்கள். பயங்கர ஆயுதங்கள் இதனூடாகக் கைமாறுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

### கடத்தப்பட்டு காணாமற்போன

# கொலம்பிய அரசு சார்பான துணைப் படைத்தலைவர் பலி!

கடத்தப்பட்டு காணாமல் போயிருந்த கொலம்பியாவின் ஏ.யு.சி என்ற அரசசார்பான துணைப்படையின் தலைவர் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏப்ரல் 16 ஆம் திகதி கார்லோஸ் கஸ்தனியோ, அவரின் பண்ணையின் அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின்பின் காணாமற்போனார். அவர் தமது முன்னைய தோழர்களுக்குப் பயந்து ஒளித்து வாழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

கஸ்தனியோவின் நண்பர் செய்தியாளர்களுக்கு தெரிவிக்கையில் அவர் உண்மையில் கைது செய்யப்பட்டுகொல்லப்பட்டார் எனக் குறிப்பிட்டார். இவரின் மரணம் துணைப் படைக்கும் போகோலாவுக்கும் இடம் பெறும் பேச்சுவார்த்தைகளைப் பாதிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கஸ்தனியோ மிகவும் பயங்கரமான மனிதர் என்றும் அவர்மேல் பல கொலைகளையும், கூட்டுக் கொலைகளையும் செய்ததற்கான பாரிய குற்றங்கள் சுமத்தப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏ.யு.சி. துணைப்படை அரசுடன் தனது 13,000 ஆயுதம் தாங்கிய படைவீரர்களை நீக்குவதற்கான பேச்சுவார்த்தையை நடத்திக் கொண்டு இருந்தவேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

றொய்ட்டர் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த செய்தியாளர் தம்முடன் பெயர் குறிப்பிடாத ஸ்தாபனம்



கதைத்ததாகவும், பண்ணையில் நடந்த சம்பவத்தை அவர்கள் கண்டதாகவும் தெரிவித்திருந்தார்.

கொமாண்டர் கார்லோஸ் பிடிபட்டு, இருநாட்களின் பின்னர் கொலலப்பட்டார் எனவும் அந்த பெயர் குறிப்பிட விரும்பாத வட்டாரம் தெரிவித்ததாக மேலும் குறிப்பிட்டார். இந்த இருநாளும் அவரின் கைகளும், கால்களும் கட்டப்பட்டே இருந்தன எனவும் அவர் குறிப்பிட்டார்.

கஸ்தனியோ 1997 இல் ஏ.யு.சி என்ற துணைப்படையை உருவாக்கினார். இவர் இடது சாரிப் போராளிகளுடன் சண்டையிட்டார். அவர்கள் இறக்கும் வரையில் சண்டையிடுவது என்பதே இவரின் நோக்கமாகும்.

உலக நோக்கு

# தற்கொலைத் தாக்குதல் நடத்தியவர் அடையாளம் காணப்பட்டுள்ளாராம்


### சவுதி அரசாங்கம் தெரிவிப்பு

சவுதி அரேபிய தலைநகர் றியாட்டில் கடந்த மாதம் 21 ஆம் திகதி படையினர் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தியவரை தாம் அடையாளம் கண்டுள்ளதாக சவுதி அரசாங்கம் அறிவித்துள்ளது.

அப்துல் அசிஷ் பின் அலி அல் முதாகிஷ் என்பவரே இத் தாக்குதலை நடத்தி ஐந்து பொதுமக்கள் உட்பட தானும் உயிரிழந்து மேலும் 150 பேரைக் காயப்படுத்தியவர் என சவுதி உள்துறை அமைச்சு தெரிவித்தது.

இவர் பெயர் இஸ்லாமியக் குழுக்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளதெனவும், ஏற்கனவே பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவரெனவும் சவுதியின் அதிகாரிகள் பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலுக்கு 1200 கி.கிராம் எடையுள்ள வெடிமருந்து நிரப்பப்பட்ட குண்டு பாவிக்கப்பட்டதாக உள்நாட்டமைச்சு மேலும் தெரிவித்தது.



கடந்த வருடம் மே மற்றும் நவம்பர் மாதங்களில் சவுதி தலைநகர் றியாட் மீது இஸ்லாமிய போராளிகளினால், நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 51 பொது மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இதன் பின்னர் சவுதி பொலிஸார் இஸ்லாமிய போராளிகளை வேட்டையாடிய போதும், கடந்த மாதம் மீளவும் றியாட்டில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதம் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு அல் கொய்டா அமைப்புடன் தொடர்புடைய அல் கரமென் என்ற குழு உரிமை கோரியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# சிசிலி மாபியா குழுத் தலைவர் மாரடைப்பால் உயிரழந்தார்!

சிசிலியில் மாபியா தலைவராகச் செயற்பட்ட கயிரனோ பலமென்ரி 80 வயதில் அமெரிக்க மருத்துவமனையில் இதயநோயினால் மரணமடைந்தார். அமெரிக்காவில் 1975 தொடக்கம் 1984 காலப்பகுதியில் 'பீஸா' எனப்படும் உணவுப்பொருள் விற்பனைக் கடைகள் மூலம் கொக்கயின், ஹெரோயின் எனப்படும் போதை வஸ்துக்களை சட்டவிரோதமாக விற்பனை செய்துவந்தார். 1987 ஆம் ஆண்டு அமெரிக்க நீதிமன்றத்தினால்



47 ஆண்டு காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தார். அத்துடன் மாபியா அமைப்பினை நகைச்சுவையாக ஏளனம் செய்த வானொலி அறிவிப்பாளரை கொலை செய்து இறந்த உடலை ரயில் பாதையில் வீசியிருந்தார் எனக்குறறம் சுமத்தப்பட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தார். சிசிலி நாட்டில் 1970 ஆம் ஆண்டுகளில் போதைவஸ்து கடத்தல் தலைவர்களின் தலைவர் என அமெரிக்க சட்டத்தரணிகளால் வர்ணிக்கப்பட்டிருந்தார். இவரது போதைவஸ்துத் தொழிலில் எதிராளிகள் அதிகரித்ததால் சில காலம் பிரேசில் நாட்டில் வசித்தார்.

# பிரிட்டன் படையினரால் ஈராக் மக்கள் துன்புறுத்தல்




பிரித்தானியப் பத்திரிகையான 'டெய்லி மிரர்' ஈராக்கிய சிறைக் கைதி ஒருவர் துன்புறுத்தப்படும் படமொன்றை பிரசுரித்திருந்தது. இப்படத்தில் ஈராககியர் ஒருவர் அடித்துதைக்கப்பட்டு அவா மீது சிறுநீர் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பான குற்றச்சாட்டுக்களை பிரித்தானியப் பாதுகாப்பு அமைச்சு விசாரிக்கவுள்ளது. அமெரிக்கப்படையினர் ஈராக்கியக் கைதிகள் மீது துன்புறுத்தல்களை மேற்கொண்டு வருகின்றனர் என்ற குற்றச்சாட்டை வலுப்படுத்துவதாகக் கருதி, பிரித்தானியாவின் பிரதம மந்திரியின் அலுவலகம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இவ்வகையான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அமெரிக்க அதிபர் புஷ் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்திருந்தார். இதே வேளை பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளயரின் பேச்சாளர் தெரிவித்த கருத்தில் அமெரிக்கக் கூட்டுப்படையின் திட்டங்களுக்கு எதிராக உளப்பாங்கினை மக்களிடம் இப்படம் வெளிப்படுத்தலாமெனத் தெரிவித்தார். அத்துடன் பாதுகாப்பு அமைச்சுத் தொடர்பாக கருத்துக்கள் வெளியிட்டுள்ளதெனவும் இவை ஈராக்கிய மக்களின் மனங்களை வெல்வதற்கு அச்சுறுத்தலாகவும் அமைந்துள்ளதெனவும் தெரிவித்தார்.

இப்படங்கள் தொடர்பாக அராபியத் தொலைக்காட்சி நிறுவனத்தின் செய்திப் பிரிவின் ஆசிரியர் தெரிவிக்கும்போது அராபிய நாடுகளின் மக்கள் மத்தியில் ஆத்திர உணர்வை அதிகரிக்கச் செய்துள்ளதெனக் குறிப்பிட்டார்.

# ஐரோப்பிய ஒன்றியத்துடன் மேலும் சில நாடுகள் இணைவு

ஐரோப்பிய ஒன்றியத்தில் முன்னர் அங்கத்துவம் வகித்த 15 நாடுகளுடன் சைப்பிரஷ், செக் குடியரசு எஸ்தோனியா, ஹங்கேரி, லூர்து வேனியா, மொல்ரா, போலந்து சுலோவாக்கியா, ஸ்லோவேனியா ஆகிய நாடுகளும் புதிதாக இணைந்துளளன.

முன்னைய 15 அங்கத்துவ நாடுகளும் புதிதாக இணைந்துள்ள நாடுகளை வரவேற்றுள்ளன. இந்த நாடுகளின் தலைவர்கள் ஐரிஷ் பிரதமர் பேட்டியா அகௌடனுடன் இணைநது ஐரிசின் தலைநகர் டப்ளினில் கொடியேற்றும் வைபவமொன்றில் பங்குகொள்ளவுள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்தில் மொத்தமாகவுள்ள 25 நாடுகளும் உலகின் மிகப்பெரிய வர்த்தக பங்காளிகள் எனக் கருதப்படுகின்றது. மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடுகளின் மொத்த மக்கள் தொகை 445 மில்லியனாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த வைபவத்தில் பங்குகொண்ட போலந்து ஜனாதிபதி தெரிவிக்கும்போது, கனவு ஒன்று உண்மையாகியுள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

புதிதாக ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்துள்ள நாடுகள் வறுமையில் சிக்கியுள்ளமையும் புதிதாக உருவாகிய நாடுகளும் ஆகும். இவை ஐரோப்பிய நாடுகளுடன் இணைவதன் மூலம் தம்மை வளப்படுத்திக்கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 8 முன்னாள் கொம்யூனிஷ நாடுகள் ஒன்றியத்துடன் இணைந்துள்ளன. இவை சோவியத் ஒன்றியத்தின் ஆளுமைக்குட்பட்டிருந்தன. அத்துடன் ஐரோப்பிய நாடுகளை ஒன்றிணைப்பதற்காக உரிய முயற்சிகளை மேற்கொண்டிருந்தன. முன்னாள் ஜேர்மனியத் தலைவர் ஹெல்மட் கோல் கண்ணீரின் மத்தியில் உரையாற்றியிருந்தார்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர் குழுக்கிடையே மோதல்!

## 20 பேர் காயமுற்றனர்

(கொழும்பு)

சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் இரண்டு மாணவர் குழுக் களிடையே நேற்று முன்தினம் ஏற் பட்ட மோதலில் 20 மாணவர்கள் காயமடைந்தனர்.

இந்தக் கோஷ்டி மோதலில் காயமடைந்த நான்கு மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ள அதேவேளை, மிகுதி மாணவர்கள் சிறு காயங்களுக்குச் சிகிச்சைபெற்றுச் சென்றனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு கலகம் அடக்கும் பொலிஸார் அழைக் கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டிற் குள் கொண்டு வரப்பட்டதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் காலை பல் கலைக்கழகத்தில் பரீட்சை நடந்து கொண்டிருந்த வேளையிலேயே இந்த இரு மாணவர்குழுக்களி டையே மோதல் இடம்பெற்றதா கவும், அன்று மாலை பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாகவும் தெரிவிக் கப்படுகிறது.

# மேதினத்தன்று கொழும்பில் 20 ஊர்வலங்கள் 8 கூட்டங்கள்

(கொழும்பு)

118 ஆவது சர்வதேச தொழி லாளர் தினமாகிய நேற்று கொழும் பில் 20 ஊர்வலங்களும் 8 பொதுக் கூட்டங்களும் இடம்பெற்றன.

கொழும்பு மாநகரசபை மைதா னத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஜே.வி.பி முதலான கட்சி களின் வெவ்வேறு ஊர்வலங்கள் ஒன்றிணைந்த கூட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இதேபோல் ஏனைய அரசியற் கட்சிகளும் இத்தகைய ஊர்வலங் களையும், பொதுக்கூட்டங்களையும் நடத்தியுள்ளன.

இந்தக்கூட்டங்களிலும், ஊர்வலங் களிலும் கடந்த பொதுத் தேர்தலின் போது போட்டியிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

ஆளும் கட்சி சார்பிலும், எதிர் கட்சி சார்பிலும் அதிகமான நாடா ளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டங்களில் கலந்து கொண்ட மையும் குறிப்பிடத்தக்கது. (01)

# புலிகளிடம் இடைக்கால...

செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேபோல் வவுனியா நகரிலும் மட்டக்களப்பின் களுதாவளைப் பிர தேசத்திலும் மேதின நிகழ்வுகள் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டுள்ள தோடு அங்கெல்லாம் தமிழீழ விடுத லைப்புலிகளிடம் இடைக்கால நிர் வாகத்தை வழங்குமாறும் வலியுறுத் தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழீழ விடு தலைப்புலிகளின் முக்கியஸ்தர் களும் கலந்து கொண்டமை குறிப் பிடத்தக்கதாகும்.

(10,03,201)

# தமிழருக்கு உரிமை வழங்குவதற்கான சரியான அடித்தளம் இடுவதன் மூலம் சமாதானம் மலரும் சூழல் உருவாகும்!

## மே தினத்தில் இளம்பரிதி உரை




தமிழர்களின் ஒட்டுமொத்தமான சக்தியைப் புரிந்துகொண்டு - அவர் களின் உரிமைகளை வழங்குவதற் கான சரியான அடித்தளத்தை புதிய அரசு இடுவதன் மூலம், நோர்வே யின் அனுசரணையுடன், அவர்களு டன் எமது தலைமையும் பேச்சுக் களை ஆரம்பிப்பதற்கான சூழல் உரு வாகும் என யாழ்.மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத் தில் நடைபெற்ற மே தின நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பு உரையாற் றும்போதே அவர் இவ்வாறு தெரிவித தார். மேலும் அவர் கருத்துத் தெரி விக்கையில்,

உலகத்தில் பாட்டாளி வர்க்கம் நசுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டபோதுதான்- அதற்கு எதிராக அணிதிரண்டு எழுந் தது. இதனை யாவரும் அறிவார்கள்.

இந்தத் தொழிலாளர்களின் உரி மைகள், இரத்தங்கள் சிந்தியே நிலை நாட்டப்பட்டன. தொழிலாளர் உரிமைகளை தட்டிக்கேட்டவர்கள் கொலை செய்யப்பட்டார்கள், தூக் கில் இடப்பட்டார்கள். சிறைப் பிடிக் கப்பட்டார்கள்.

ஆனால், பாட்டாளி வர்க்கம் உறுதியுடன் போராடி உரிமைகளை வென்றது. அந்த உரிமைகளையும், பலன்களையுமே இன்றைய தொழி லாளர்கள் அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

எவ்வாறு பாட்டாளி வர்க்கம் தமது உரிமைகளைப் பெற்றதோ அவ் வாறே, அடக்கப்பட்டு ஒடுக்கப்படும் மக்களும் தமது உரிமைகளைப் பெறு வார்கள்.

இவ்வாறுதான், நாமும் எமது உரிமைக்காக போராடி - இன்று ஓர் வலுவான நிலையில் இறுதிக் கட்டத்தில் மக்களுடன் கலந்து நிற் கின்றோம்.

சில இடங்களில் மே தினம் நடை பெறுவது தமது அரசியற் செல்வாக் கைக் காட்டுவதற்காகும். ஆனால், நாம் இன்று ஓர் தேசியப் பலத்திற் கான வெளிப்பாட்டு பிரகடனத்திற் காக கூடியிருக்கிறோம்.

தமிழ்த் தேசிய போராட்டத்தின் தோற்றமும் வளர்ச்சியும், வலுவும் பாட்டாளி வர்க்கத்தின் ஓர் திருப்பு முனையாக அமைந்துள்ளது. இந் தத் திருப்புமுனைக்கு காரண கர்த் தாவாக எமது தேசியத் தலைவர் வே.பிரபாகரன் விளங்குகிறார்.

எமது மாவீரர்களின் தியாகங்க ளும், அர்ப்பணிப்புக்களும் பாட்டாளி வர்க்கத்தின் வாழ்க்கையை மேம்ப டுத்துவதுடன் பின்னிப்பிணைந்ததா கக் காணப்படுகிறது.

எமது மக்கள், தமது வளங்கள் பறிக்கப்பட்ட நிலையிலேயே காணப் படுகின்றனர். இதைவிட இன்று தொழில் பாதுகாப்பின்மையும் எமது பிரதேசத்தில் காணப்படுகின்றது. இவற்றிலிருந்து நாம் விடுபட வேண் டும். எமக்கொரு நாடு வேண்டும்.

வட-கிழக்கில் 18 ஆயிரம் மாணவர்கள் உயர்தரப் பரீட்சையில் தோற்றுகின்றார்கள். இவர்களில் 800 மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகின்றனர். இவர் களில் 400 பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கக்கூடிய நிலை இன்று இருக்கிறது. எனவே எமக்கென்று ஒரு தொழில் வேண்டுமானால், எமக் கென்று ஒரு சுயநிர்ணய உரிமை வேண்டுமானால், எமக்கொரு நாடு வேண்டும்.

எமது மக்கள் எமக்கொரு நாடு வேண்டுமென்று பற்றுறுதியுடன் தொடர்ந்தும் போராடிக்கொண்டிருக் கின்றனர். அந்த மக்களின் பற்று றுதிக்கு உயிர் கொடுக்கும் வகை யில், அரசியல், இராணுவ இராஜதந் திர முறையிலே இந்தப் போராட் டத்தினை மேற்கொண்டு வருகின் றார் எமது தலைவர். தற்போது நாம் ஒரு நாட்டுக்கான கட்டுமானங் களைக் கொண்டிருக்கிறோம். இந் தக் கட்டுமானம் உலகத்தில் உள் ளவர்களினால் இன்று மதிக்கப்பட்டு, கௌரவிக்கப்படுகின்றது.

எமது நாட்டின் விடிவுதான் எமது பொருளாதாரம் சிறக்க வழிபிறக் கும். தொழிலாளர்களுக்கு தற்போது இழைக்கப்பட்டுவரும் துன்பத்தினை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சிங்கள உழைக்கும் வர்க்கமா னது - இனவாத சக்திகளைத் தகர்த் தெறியும் என்று நாம் நம்புகின்றோம். இதனைப் புரிந்துகொண்டு இலங் கைத்தீவில் தமிழ்த்தேசிய மக்க ளின் கௌரவமான, ஒரு சிறப்பான வழியை ஏற்படுத்த சிங்களப் பாட் டாளி மக்களிடம் நாம் வேண்டு கோள் விடுக்கின்றோம். ஏனென்றால்- அவர்களும் சுதந்திரமாக வாழ்கின்ற நிலையில், நாமும் சுதந்திரமாக வாழவே விரும்புகின்றோம்.

தமிழ்மக்களுக்கு இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஒன் றினை வழங்குவதன் மூலம் இலங் கைத் தீவை மகிழ்ச்சிகரமான நாடாக மாற்றமுடியும். எனவே சிங் களத் தலைமைகள் இதனை உணர்ந்து செயற்படுவதன் மூலம் தான் சரியான வழியொன்று பிறக்கும்.

ஜப்பானிய பத்திரிகை நிறுவ னம் ஒன்றைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் என்னைச் சந்தித்தபோது, இதுவரை காலமும் தமிழ்மக்களின் போராட்ட வரலாறு என்பது சர்வதே சத்திற்கு எதிர்மறையானது. ஆனால் தற்போது தமிழர்களின் உரிமை தொடர்பாக சர்வதேசம் நியாயமான நிலைப்பாட்டை இன்று கொண்டுள் ளது எனக் கருத்துத் தெரிவித்தார்.

ஒரு போராட்டத்திற்கு சர்வதேச ஆதரவும், அங்கீகாரமும் கிடைக் கின்றபோது - அதன் நிலைமை களை மாற்ற முடியாது என்ற நிலை ஒன்று உருவாகி வருகின்றது.

எமக்கு ஓர் நிலையான அடித் தளம் இடுவதன் மூலம்தான் நோர்வே யின் அனுசரணையுடன் பேச்சுக் களை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை ஒன்று தோன்றும். தமிழர்களின் இராணுவ, அரசியல், தேசிய எழுச்சி என்பது தமிழர்களின் தலைவிதி யைத் தாமே தீர்மானிக்கும் சக்தி என்பதை இந்த இடத்தில் கூற விரும்புகின்றேன் என மேலும் அர சியற்துறைப் பொறுப்பாளர் கருத் துத் தெரிவித்தார்.

# தமிழ்த் தேசியத்தின் இருப்பினைத்...

தமிழ்த் தேசியத்தின் மீது சிங் கள அரச அதிகார வர்க்கத்தினரா லேயே இனஅழிப்புப் போராட்டம் திணிக்கப்பட்டது என்பது யாவரும் அறிந்ததே. அதனால் விளைந்த பெரும் அழிவுகளில் இருந்து மீண் டெழுவதற்கான மனிதநேய ஒத்து ழைப்பினை வழங்குவது மனிதம் என்னும் உயரிய பண்பிணைக் கொண்ட சர்வதேச சமூகத்தின் கடப்பாடாகும். இந்தவகை ஒத்து ழைப்பு தமிழ் மக்களது சமூக, பொருளாதார, அரசியல் இருப்பை மேம்படவைக்கும் நிரந்தர சமாதா னத்திற்கான பாதையை செப்பனிட வைக்கும் என்பதனை வலியுறுத்து கின்றோம்.

பெரும் ஈகங்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை யில் தமிழ்த் தேசிய மக்களால் முன்னெடுக்கப்படும் தேசிய விடு தலைப் போராட்டமானது உயர் வலுக் கொண்டதாக தலைநிமிர்ந்து நிற்கின்றது. எமது ஏகப்பிரதி நிதிகளாக நாம் வரித்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன் மொழியப்பட்ட இடைக்கால தன் னாட்சி அமைப்பே நிரந்தர சமாதா னத்திற்கான பாதையை அமைத் துக்கொடுக்கும் என்பதே மறுக்க முடியாத எமது நிலைப்பாடாகும்.

எமது தாயக நிலத்தின் அனைத்து தேசிய வளங்களினதும் உரிமையாளர்களும், உடமை யாளர்களும் நாங்களே. அவற்றைப் பயன்படுத்துவதற்கும், பேணிப்பாது காப்பதற்கும், எதிர்கால சந்ததி யினருக்கும் கையளிப்பதற்கான உரிமை எமது தேசியத்துக்கு மட்டுமே உண்டு. எமது கடல்வளம், எமது நிலவளம் எமக்கு மட்டுமே உரியது. எமது கடற்றொழிலாளர் களும், விவசாயிகளும் தமது தொழிற்துறையில் ஈடுபடுவதற்கு இலங்கையில் பேரினவாத மயப் பட்ட இராணுவத் தடைகளும், உயர்பாதுகாப்பு வலயமும் முட்டுக் கட்டையாக உள்ளன. இராணுவக் கெடுபிடிகளும், நிபந்தனைகளும் எமது தேசிய பொருளாதார வளங் களை அழிக்கும் கேடுகெட்ட உள் நோக்கம் கொண்டவை. 10877 இற் கும் மேற்பட்ட கடற்றொழிலாளர் குடும்பங்கள் வறுமையால் வாடுகின் றன. அந்நியர்களால் அள்ளிச் செல் லப்படுகின்றது எமது கடல்வளம்.

முன்னர் வருடாந்தம் 40 ஆயிரம் மெற்றிக் தொன்னுக்கும் மேலதிக மாக பயன்தந்த கடல் வளமானது இன்று சுருங்கி 3 000 மெற்றிக் தொன்னாகிவிட்டது.

3500 ஹெக்ரெயர் வயல் நிலங் களும், பயிர்விளை நிலங்களும் பயன்படுத்தமுடியாதபடி உயர்பாது காப்பு வலயத்துக்குள் புதர்மண்டிக் கிடக்கின்றன. எமது தேசிய செல் வமாகிய பனைவளத்தில் - பனை கள் படைத்தரப்பினரால் துவம்சம் செய்யப்பட்டுள்ளன.

இதனால் வேலைவாய்ப்பின்மை யும், வறுமையும், இயல்புவாழ்நிலை பாதிப்பும் தொடரவே செய்கின்றன. எனவே போர்நிறுத்தத்தின் நன்மை கள் சிங்கள மக்களே அனுபவிக்கி றார்கள்.தமிழ் மக்களது வாழ்நிலை இப்போதும் இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை.

இராணுவ நில வன்பறிப்பினால் இடம்பெயர்ந்து துன்பமுறும் மக்கள் நிர்க்கதியாக இடர்வாழ்நிலைமை யைத் தொடர்கின்றனர். நிரந்தர சமாதானத்தின் மீதான நம்பிக்கை சிறிது சிறிதாக தமிழ் மக்கள் மன தில் குறைந்தே வருகிறது. இதற்குப் பொறுப்பானவர்கள் மாறிமாறி வரும் சிறிலங்கா அரசாங்கங்களே.

மனித குலத்தின் சரிபாதி அங் கமாகிய பெண்கள் படுமோசமாக சுரண்டப்பட்டே வருகின்றார்கள். பழ மையின் பண்பாட்டு வேர்கள் சமூக அமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டா லும், பெண்களை ஒடுக்கியே வரு வதற்கான கருவிகளாகவே செயற் படுகின்றன.

அத்துடன் சிங்களப் பேரின வாதத்தின் வெறியாட்டத்திற்கும் பலியாகின்ற கொடுமையையும் பெண்கள் எதிர்நோக்குகின்றனர். எனவேதான், பெண்களை பிணைத் துள்ள அரசியல் சமூகப் பொரு ளாதார பண்பாட்டுத் தளைகளில் நின்றும் விடுபட புரட்சிகர வீறுடன் முன்வருமாறு அனைவரையும் அறைகூவி அழைக்கின்றோம்.

திட்டமிடப்பட்ட வகையில் தமிழ் மக்களது அரும்செல்வமாகிய கல் வித்துறை பெரும் பாதிப்புக்குள்ளாக் கப்படுவது சிங்களப் பே[illegible]னவாதத் தின் ஒருவகை ஒடுக்குமுறைமை யாகும்.

கல்விக்கொள்கையை வகுப்ப தும், நடைமுறைப்படுத்துவதும் எமது தமிழ்த் தேசிய இனத்தினால் நிர்ணயிக்கப்படும் பொழுதுதான் சுதந்திரத்தை நாம் தற்காத்துக் கொள்ள முடியும் என்பதை வலி யுறுத்துகின்றோம். மகிழ்ச்சிகரமான சூழலில்வழங்கப்படும் ஆக்கபூர் வமான கல்வியே சர்வதேச தரத் திற்கு எமது கல்வித்துறையினை உயர்த்தும் இதனால் அனைத்துல கமுமே பயன்பெறும்.

மேற்கூறிய பிரகடனத்தில் வெளி யிடப்பட்ட எமது முன்வைப்புக்கள் யாவுமே எமது செயற்றிறன் மிக்க பலத்தின் வெளிப்பாடுகள் என்ப தையும், இவை மறுக்கப்படும் பொழுது எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கின்ற சுயநிர்ணய உரிமை என்னும் அதியுயர் மனித உரிமைகளைப் பேணும் கருவியை நாமே கையில் எடுத்து எமது தமிழ் தேசியத்தின் சுதந்திரத்தையும், கௌரவத்தையும், இருப்பையும் தற்காத்துக்கொள்ள புரட்சிகர எழுச்சியுடன் போராடுவோம் என்ப தனை அனைத்துலகத்திற்கும் வலியுறுத்துவதற்காக வெளியிடு கின்றோம் என மேதின நிகழ்வில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கந்தப்பொல வன்முறையில் உயிரிழந்தோருக்கு நட்டஈடு

நுவரெலியா-கந்தப்பொலவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம் பவத்தில் உயிரிழந்த இருவரினதும் குடும்பங்களுக்கு தலா ஒரு இலட் சம் ரூபா நட்டஈட்டை வழங்க அர சாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் ஆலோசனை யின் பேரில் இந்த நட்டஈடு வழங் கப்பட இருப்பதாக தோட்ட உட்கட் டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் சி.பி.இரத்நாயக்கா தெரி வித்தார்.

அத்துடன் சேதமாக்கப்பட்ட கடைகளுக்கு நட்டஈடு வழங்கப்பட வுள்ளது. இந்த் வன்முறைச் சம்ப வங்களில் 42 கடைகளும் 8 வீடுக ளும் சேதமாக்கப்பட்டன.

இதேவேளை, பொலிஸாரின் துப் பாக்கிச் சூட்டில் உயிரிழந்த இரு வரினதும் இறுதிக் கிரியைகள் நேற்று மாலை இடம்பெற்றன. இறுதிக் கிரி யைகளில் அரசியல் பிரமுகர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஊர்வலத்திற்கு 2000 இற் கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப் புக் கடமையில் ஈடுபட்டமை குறிப்பி டத்தக்கதாகும்.

## பாதுகாவலர் சங்கப் பொதுக்கூட்டம்

யாழ்.மாவட்டத்தில் கைது செய் யப்பட்டு காணாமற்போனோர் பாது காவலர் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ். முனியப்பர் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு சங்கத் தைச் சேர்ந்த அனைவரையும் தவ றாமல் கலந்துகொள்ளுமாறு சங் கத்தின் செயலாளர் கேட்டுள்ளார்.

# விசேட அதிரடி...

பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் எதிர்த்திசையில் வந்து கொண்டிருந்த இரண்டு விசேட அதிரடிப்படையினர் படுகாயமடைந் தனர். காயமுற்றவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார். காயமுற்ற இன்னொரு சிப்பாய் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனு[illegible] திக்கப்பட்டுள்ளார்.

CATWAS.COM
Computer Academy
மீண்டும் புதிய பிரிவு ஆரம்பம்
Catwas.com Computer Academyயில் இணைய இருக்கும் மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அடுத்த பிரிவு 05.05.2004 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றோம்.
Diploma Courses
Ms Office 1,000/-
DTP 1,500/-
Hardware 1,500/-
Web page 1,500/-
இப்பிரிவில் இணையும் மாணவர்களுக்கு அனுமதிக்கட்டணம் முற்றிலும் இலவசம்.
26, Somasundaram Avenue,
Chundukuli, Jaffna.
T.P: 021-222 3805
(சி/2493)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.